# <u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்**,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**<u>ந.க.எண் : 8991 / 2012 / எம்சி. 8 நாள் : 14.08.2012</u>**

**<u>அய்யா /அம்மா,</u>**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 16.08.2012 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

/உண்மை நகல் /

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - ஆகஸ்ட் 2012

## நிகழ்ச்சி நிரல்

**பொருளடக்கம்**

அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்

ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள் |
|---|---|
| 1 | பொது சுகாதாரம் - கொசு ஒழிப்பு பணிக்கு ஏற்கனவே உள்ள 72 பணியாளர்களின் காலத்தை 01.07.2012-ம் தேதி முதல் 12 நாட்களுக்கு நீட்டிப்பு செய்வது மற்றும் 100 பணியாளர்களை 01.07.2012 முதல் 31.03.2013 வரை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்த பணி உத்தரவு வழங்கியது – பின்னேற்பு வேண்டுவது- தொடர்பாக |
| 2 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - மாத வாடகை இனங்கள் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் நேரக் காப்பாளர் அறைகள் மூன்றாண்டு மற்றும் ஒன்பதாண்டு முடிவு பெற்றது - மாத வாடகை தொகை உயர்வு செய்து உரிமம் நீட்டிப்பு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 3 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை உரிம இனங்களுக்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது – ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 4 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 42 - புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்தல் - நாளொன்றுக்கு ரூ.3500 வாடகையாக நிர்ணயம் செய்தல் - மாமன்றம் முடிவு செய்யலாம் என்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்மீது மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 3 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி வணிகவளாக கடைகளில் பொது விநியோக கடைக்கும் மற்றும் சுகாதார பிரிவு அலுவலகத்திற்கும் கடைகள் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 6 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 26 - புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | வருவாய் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 2 – வி.பி.வி. நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | வருவாய் பிரிவு - -தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டுகள் 77, 79 மற்றும் 86 உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளின் வாடகையை வெளிமார்க்கெட் மதிப்பின் அடிப்படையில் உயர்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 9 | வருவாய் பிரிவு - வார்டு எண் 79ல் உள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி AA ஸ்கீம் ரோடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதியதாக கட்டியுள்ள 2 கடைகளை ஒன்றை நியாயவிலை கடைக்கும் மற்றொன்றை கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கும் ஒதுக்கீடு செய்தல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 10 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம்– சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட்டிலுள்ள இதுவரை உபயோகப்படுத்தாத அறை – பொது ஏலம் விடுதல்- மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 11 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - எம்.எம். அலி மார்க்கெட் வணிக வளாக கடைகளின் மாத வாடகையை உயர்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 12 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் – வார்டு எண்.24–ல் உள்ள 3923 ச.அடி பரப்பளவு கொண்ட வ.உ.சி திருமண மண்டபத்தில் தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்டமான விலையில்லா மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் ஆகியன இருப்பு வைக்கும் குடோன் ஆகப் பயன்படுத்த வாடகை நிர்ணயம் செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **13** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - உரிமம் காலம் - 9 ஆண்டுகள் முடிவடைந்த இனங்களுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகையை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **14** | வருவாய் பிரிவு - மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையம் - குத்தகை இனங்கள் 2012-13-ம் ஆண்டிற்கான உரிமம் ஏப்ரல் 2012 முதல் ஜுன் 2012 முடிய நீட்டிப்பு வழங்குதல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **15** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் வார்டு எண்.15- மருதமலை மெயின் ரோடு பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் காவல் துறையினரால் சோதனைச் சாவடி அமைக்க 20’x20’ அளவில் இடம் கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **16** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - 2012-15-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது –மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **17** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம்–வார்டு எண்.8– கவுண்டம் பாளையம் பிரிவு அலுவலகத்தில் காலியாக உள்ள முதல் தளத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **18** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் – வார்டு எண்.12–இராமலிங்க நகர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான 53.76 ச.மீ பரப்பளவு கொண்ட கட்டிடத்தை நியாய விலைக் கடை பயன்பாட்டிற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்தல்– மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **19** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - மூன்றாண்டு உரிம காலம் முடிவுற்ற கடைகளுக்கு 15 % உயர்வு செய்தும் மற்றும் 9 வருடம் முடிவடைந்த கடைகளுக்கு பொதுபணித்துறை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல்- மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **20** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - அவினாசி ரோடு வணிக வளாகம் கடைகள் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் -தொடர்பாக. |
| **21** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண். 84-ல் கெம்பட்டி காலனி தர்மராஜா கோவில் வீதி மாநகராட்சி திருமண மண்டபம் எதிரில் அமைந்துள்ள வார்டு அலுவலக கட்டிடம் காலியாக உள்ளதை தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் இயங்கி வரும் அமுதம் அங்காடி எண். 49க்கு வாடகைக்கு ஒதுக்கீடு செய்தல்- மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **22** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம், உக்கடம் பேருந்து நிலையம் தமிழ் புத்தக கடைகளுக்கு உரிமம் புதுப்பித்து வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி வேண்டுவது – தொடர்பாக |
| **23** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.72-ல் அவினாசி சாலையிலுள்ள வ.உ.சி.பூங்கா மைதானம் -வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **24** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம்- தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு மற்றும் தெற்கு தாலுக்காவில் உயர்ரக மதுபான கடைகள் திறப்பதற்கு கடைகள் ஒதுக்கீடு செய்ததை ரத்து செய்து மறு மின் ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் -தொடர்பாக |
| **25** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண்.81-ல் ஒப்பணக்கார வீதியிலுள்ள மாநகராட்சி வணிக வளாகம் கடைகள் - 3 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15% சதவீத வாடகையை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **26** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - வார்டு எண். 72, டாக்டர்.நஞ்சப்பா ரோடு வணிகவளாக கடைகள் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **27** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - மாத வாடகை கடைகள் மற்றும் குத்தகை இனங்கள் - ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்தல் மற்றும் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக |

| | |
|---|---|
| **28** | வருவாய் பிரிவு - மத்திய மண்டலம் - மாத வாடகை கடைகள் மற்றும் குத்தகை இனங்கள் - ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **29** | பொறியியல் பிரிவு - பழைய மண் அள்ளும் இயந்திரங்களை கழிவு செய்து அதற்கு மாற்றாக புதிய டிராக்டர்கள் வாங்குவது – தொடர்பாக. |
| **30** | பொறியியல் பிரிவு - வாகனங்கள் – அலுவலர்கள் பயன்பாட்டிலுள்ள பழைய வாகனங்களை கழிவு செய்து அதற்கு மாற்றாக புதியவைகள் வாங்குவது – தொடர்பாக. |
| **31** | நகரமைப்பு பிரிவு - புவியியல் தகவல் அமைப்பு (Geographical Information System – GIS) சொத்து கணக்கெடுப்பு - ஒவ்வொரு சொத்திற்கும் தனியாக குறியீட்டு எண் ஒதுக்கீடு செய்தல் - எதிர்கால தேவைகளுக்கு பயன்படுத்துதல் - தனியார் அமைப்புகளை பயன்படுத்துதல் - கணக்கெடுப்பு பணிக்கு தொகை வழங்குதல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| **32** | பொறியியல் பிரிவு- சிறுவாணி – பில்லூர் II குடிநீர் திட்டங்களை இணைத்தல் - ராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பில்லூர் IIம் குடிநீர் திட்டத்திலிருந்து பாரதி பூங்காவிலுள்ள சிறுவாணி நீர்த்தேக்க தொட்டி இரும்பு நீர்க்கொணரும் குழாய்கள் (MS Pipes) இணைத்து குடிநீர் விநியோகம் செய்தல் - உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1500 இலட்சம் - அரசிடமிருந்து நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலிருந்து நிதி உதவி, தொழிற்நுட்ப அனுமதி பெற்று திட்டம் செயல்படுத்த மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

**(குறள் - 213)**

**விளக்கம்**

இன்றைய வாழ்க்கை சிறக்கவும், எதிர்கால வாழ்க்கை மேலாக வளரவும், சமுதாயப் பொதுநலன் கருதி உழைக்கும் வாய்ப்பு பெறற்கரியது.

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம் : 1**

தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்குவதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுவரும் இந்தியாவின் எதிர்காலம், தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதல்முறையாக உள்ளாட்சியில் நல்லாட்சி வேண்டும், அந்த உள்ளாட்சி மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்ய வேண்டும் உள்ளாட்சி நிர்வாகத்திற்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக சிறந்த மாநகராட்சிக்கு முதலமைச்சர் விருது அறிவித்து தமிழகத்திலேயே சிறந்த மாநகராட்சியாக கோயம்புத்தூர் மாநகராட்சியை தேர்ந்தெடுத்து, 15.08.2012 அன்று சென்னையில் நடைபெற்ற 66-வது இந்திய சுதந்திர தின விழாவின்போது ‘‘சிறந்த மாநகராட்சிக்கான‘‘ விருதை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் கோயம்புத்தூர் மாநகர மக்களின் சார்பாக தனது நன்றிகளை உரித்தாக்கி வணங்கி மகிழ்கிறது என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியின் பேரில் 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.மணிமேகலை அவர்களால் முன்மொழியப்பட்டு, 64வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.கே.சேதுவராஜ் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் : 2**

கேரள அரசு சிறுவாணி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் முயற்சியை தொடங்கிய போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோவை மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளுக்கு நீராதாரமாக விளங்கக்கூடிய சிறுவாணி ஆற்றின் குறுக்கே அணை கட்டப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று மத்திய அரசிற்கு வலியுறுத்தி கடிதம் எழுதினார்கள். அதே போன்று இம்மாமன்றமும் கேரள அரசின் இதுபோன்ற செயல் கண்டிக்கத்தக்கது, சிறுவாணி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதை கேரள அரசு கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றியது.

இந்நிலையில், நாளேடுகளில் வெளியாகியுள்ள செய்திகளில், கேரள அரசு சிறுவாணி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு ரூபாய் 400 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. சிறப்பாக செயலாற்றி வரும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் இயங்குகின்ற இந்த மாமன்றம், இப்பிரச்சனையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று சிறுவாணி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் கேரள அரசின் திட்டத்தை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதியின் பேரில் 44வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ரா.வெண்தாமரைபாலு அவர்களால் முன்மொழியப்பட்டு, நியமனக்குழு உறுப்பினர் திரு.ம.ராஜேந்திரன் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 1

பொருள் : பொது சுகாதாரம் -கோயம்புத்தூர் மாநகராட்சி – கொசு ஒழிப்பு பணிக்கு ஏற்கனவே உள்ள 72 பணியாளர்களின் காலத்தை 01.07.2012-ம் தேதி முதல் 12 நாட்களுக்கு நீட்டிப்பு செய்வது மற்றும் 100 பணியாளர்களை 13.07.2012 முதல் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்த பணி உத்தரவு வழங்கியது – பின்னேற்பு வேண்டுவது – சம்பந்தமாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். 7 நாள். 27.04.2012ல் தற்போது உள்ள 72 பணியாளர்களை 01.04.2012 முதல் 30.06.2012 வரை 3 மாத கால ஒப்பந்த காலத்தை முன்பு வழங்கப்பட்ட தொகையின் அடிப்படையில் நீட்டிக்கவும் இதற்கான செவினம் ரூ.14,80,000/-க்கும் மற்றும் தற்போது இம்மாநகராட்சி 100 வார்டுகளாக விரிவுப்படுத்தப்பட்டுள்ளதால் வார்டுக்கு 1 பணியாளர் வீதம் 100 பணியாளர்களை 01.07.2012 முதல் 31.03.2013 வரை 9 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தவும், இதற்கான செலவினம் ரூ.62 இலட்சத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி 20.06.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.மயில்வாணன் அவர்கள் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்து L1 இடத்தை பெற்றதைத் தொடர்ந்து ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு செய்ய ஒப்பந்த பரிசீலனைக் கமிட்டியின் வாயிலாக 03.07.2012 அன்று ஆணையாளர் அவர்களிடம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஒப்பந்ததாரர் விலைக்குறிப்புக்கு ஒப்புக் கொண்டு ஒரு நபருக்கு ரூ.6985/- லிருந்து ரூ.6930/- ஆக விலைக்குறைப்பு செய்து 11.07.2012 அன்று விலைக் குறைப்பு செய்து கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

ஒப்பந்த பரிசீலனைக் கமிட்டியின் வாயிலாக ஒப்பந்ததாரரின் விலைக்குறைப்பை ஏற்று ஒப்பந்ததாரர் திரு.மயில்வாணன் அவர்களுக்கு 13.07.2012 அன்று ஆணையாளர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது.

எனவே, மேற்படி பணிகளுக்கு மன்ற அனுமதி பெற காலதாமதம் ஆகும் என்பதால் அவசர அவசியத்தை முன்னிட்டு 13.07.2012 முதல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அனுமதி பெற்று வழங்கப்பட்ட ஒப்பந்த ஆணைக்கும், 01.07.2012 முதல் 12.07.2012 வரை 12 நாட்களுக்கு 72 நபர்களுக்கு உண்டான செலவினம் ரூ.1,45,000/-க்கு பெறப்பட்ட முன் அனுமதிக்கும் பின்னேற்பு வேண்டி மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண்: 4135 /2012/எம்.இ.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 165 நாள் : 16.08.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - மாத வாடகை இனங்கள் - சிங்காநல்லூர் பேருந்து நிலையம் - தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் நேரக் காப்பாளர் அறைகள் மூன்றாண்டு மற்றும் ஒன்பதாண்டு முடிவு பெற்றது - மாத வாடகை தொகை உயர்வு செய்து உரிமம் நீட்டிப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைத்தல் - தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை எண்.147 நாள் 30.02.2000
2. அரசாணை எண். 92 நாள் 03.07. 2007

--------

சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் 16’’ X 10.6’’ அளவுள்ள நேரக் காப்பாளர் அறையின் மூன்றாண்டு உரிமக் காலம் முடிவடைந்துள்ளது. மேலும் மூன்றாண்டு காலத்திற்கு கீழ்க்கண்டவாறு உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக நேரக் காப்பாளர் அறை உரிமம் நீட்டிப்பு மற்றும் வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும்.

அ.

| வ. எண் | குத்தகை இனம் | இடத்தின் அளவு | தற்பொழுது மாத வாடகை ரூ. | 15% உயர்வு செய்யப்பட்ட மாத வாடகை ரூ. | நீட்டிப்பு செய்யப்படும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை லிட். திண்டுக்கல் மண்டலம். | 16’’ X 10.6’’ | 1900 | 2185 | 31.08.2011 முதல் 31.03.2014 |

எனவே தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை லிமிடெட், திண்டுக்கல் மண்டலம். நேரக் காப்பாளர் அறைக்கு தற்பொழுது மாத வாடகையில் 15% உயர்வு செய்யப்பட்ட வாடகையாக ரூ.2185 /- நிர்ணயம் செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக் குழுவின் தீர்மான எண் 81/13.08.2012 ன்படி அனுமதி அளித்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஆ. பார்வையில் காணும் அரசாணைப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்கண்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் நேரக்காப்பாளர் அறை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து வாடகை வசூல் செய்யப்பட்டது. எனவே தற்போது 9 ஆண்டுகளுக்கு மேல் உள்ளதால் பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகையை உயர்வு செய்ய வேண்டியுள்ளது.

| வ. எண் | குத்தகை இனம் | இடத்தின் அளவு | தற்பொழுது மாத வாடகை ரூ. | 15% உயர்வு செய்யப்பட்ட மாத வாடகை ரூ. | பொதுப் பணித்துறை வழிகாட்டுதலின் படி மாத வாடகை (அரசு மதிப்பு சதுர அடிக்கு ரூ.25/-) | நீட்டிப்பு செய்யப்படும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் லிட். | 16’’ X 10.6’’ | 1900 | 2185 | 4250 | 21.06.2011 முதல் 31.03.2014 |
| 2. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை கோட்டம். | 16’’ X 10.6’’ | 1900 | 2185 | 4250 | 01.06.2011 முதல் 31.03.2014 |

எனவே, உயர்ந்தபட்ச வாடகையை அரசு வழிகாட்டி மதிப்பின்படி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். எனவே தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை கோட்டம், கும்பகோணம் ஆகிய அலுவலகங்களுக்கு நேரக் காப்பாளர் அறையை மாத வாடகையாக ரூ.4250/- நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 81/13.08.2012 ன்படி அனுமதி அளித்து மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அ மற்றும் ஆ அனுமதிக்கலாம். ந.க.எண்.16236/2007/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 166 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 81 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை உரிம இனங்களுக்கு 20.06.2012 அன்று மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது சம்மந்தமாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி பெறுதல் - தொடர்பாக.

----------------

குத்தகை இனங்களுக்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்க்காணுமாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மின் ஏலத்தில் எவரும் ஏலம் கோரமுன் வரவில்லை .

**இனம் - 1. சிங்காநல்லூர் பேருந்து நிலைய மூன்று எண்ணிக்கை எடை காட்டும் இயந்திரம்.**

| வ. எண் | பெயர் | கடைசி மூன்று ஆண்டு சராசரி | 2011-2012 ம் ஆண்டு ஏலத் தொகை | நிர்ணயம் செய்யப்பட்ட அரசு வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக்கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச ஏலத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மின் ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1. | திரு.G.சௌந்தர்ராஜன் | 34,496 | 47,628 | 50,000 | … | 13,750 | … |
| 2. | திரு.K. M.புகழேந்தி | | | | … | … | … |
| 3. | திரு.V.K. ரஹ்மத்துல்லா | | | | … | … | … |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4. | திரு.O.A.சையத் இப்ராஹீம் | | | | … | … | … |
| 5. | திரு. கலீல் ரகுமான் | | | | … | 10,500 | … |
| 6. | திரு. P.R. சம்சுதீன் | | | | … | … | … |
| 7. | திரு. C.R. விநாயகம் | | | | | 14,000 | 14,000 |

மேற்கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயம் செய்த உரிமத் தொகையைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போதைய ஏலத்தில் திரு. C.R. விநாயகம் என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 14,000/- க்கு கோரியுள்ளார்.

**இனம் - 2 சிங்காநல்லூர் பேருந்து நிலையம் மூன்று (STD BOOTH) பொது தொலைபேசி நிலையம் அமைத்து நடத்தும் உரிமம்**

| வ. எண் | பெயர் | கடைசி மூன்று ஆண்டு சராசரி | 2011-2012ம் ஆண்டு ஏலத் தொகை | நிர்ணயம் செய்யப்பட்ட அரசு வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக்கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச ஏலத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மின் ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1. | திரு.M.A.கலீல் ரஹ்மான் | 31,000 | 31,000 | 33,000 | … | 30,000 | … |
| 2. | திரு.S.ராமசாமி | | | | … | 33,000 | 33,000 |
| 3. | திரு.V.K. ரஹ்மத்துல்லா | | | | … | … | |

மேற்கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயம் செய்த தொகையை தற்போதைய ஏலத்தில் திரு.S.ராமசாமி என்பவர் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 33,000/- க்கு கோரியுள்ளார்.

**இனம் -3 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம்**

| வ. எண் | பெயர் | கடைசி மூன்றாண்டு சராசரி | 2011-2012 ம் ஆண்டு ஏலத் தொகை | நிர்ணயம் செய்யப்பட்ட அரசு வருடாந்திர உரிமத் தொகை | வருடாந்திர உரிமக்கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச ஏலத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மின் ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1. | திரு.M அன்புராஜ் | 1,26,941 | 1,26,840 | 1,26,941 | … | 62,000 | … |
| 2. | திரு. S. காளியப்பன் | | | | … | … | … |
| 3. | திரு.K.A. அபுதாஹீர் | | | | … | … | … |
| 4. | திரு.L.N.சையத்இப்ராஹீம் | | | | … | 1,37,500 | 1,37,500 |
| 5. | திரு.O.A.சையத்இப்ராஹீம் | | | | … | … | … |
| 6. | திரு.M.A. சபீர் அலி | | | | … | 56,000 | … |
| 7. | திரு.V.K. ரஹ்மத்துல்லா | | | | … | … | … |
| 8. | திரு. S. முகமது ரபீக் | | | | … | … | … |
| 9. | திரு. M.A. கலீல் ரகுமான் | | | | … | 55,000 | … |
| 10 | திரு. P.R. சம்சுதீன் | | | | … | … | … |

மேற்கண்ட இனத்திற்கு அரசு நிர்ணயம் செய்த உரிமத் தொகையைவிட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போதைய ஏலத்தில் திரு.L.N.சையத்இப்ராஹீம் என்பவர் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 1,37,500/- க்கு கோரியுள்ளார்.

(அ) **இனம் - 1. சிங்காநல்லூர் பேருந்து நிலைய மூன்று எண்ணிக்கை எடை காட்டும் இயந்திரம்**

சிங்காநல்லூர் பேருந்து நிலைய மூன்று எண்ணிக்கை எடை காட்டும் இயந்திரம் ஏழு முறை பொது ஏலம் விடப்பட்டும் அதிகபட்சமாக ரூ. 14000/- க்கு ஏலம் கோரப்பட்டுள்ளது. அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட மிகக் குறைவாகவே உள்ளது. எனவே மறு ஏலம் நடத்தும் பட்சத்தில் விளம்பர செலவினைவிட குறைவாகவே வருமானம் மாநகராட்சிக்கு ஏற்படும் என்ற காரணத்தினால் இவ்வினத்தினை குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 58/ 13.08.2012 ன் படி அனுமதி அளித்து உள்ளதின் பேரில் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ)

**இனம் - 2 சிங்காநல்லூர்பேருந்து நிலையம் மூன்று ( STD BOOTH)பொது தொலைபேசி நிலையம்.**

சிங்காநல்லூர்பேருந்து நிலையம் மூன்று ( STD BOOTH)பொது தொலைபேசி நிலையம் அமைத்து நடத்தும் உரிமம் ஏழு முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் அதிகபட்சமாக திரு.S. ராமசாமி என்பவர் ரூ.33,000/- க்கு கோரியுள்ளார்.அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு கோரியுள்ளதால் இனம் எண். 2-ஐ திரு.S. ராமசாமி என்பவருக்கு ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 58/ 13.08.2012 ன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின் பேரில் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

**இனம் - 3 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம்**

சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் நான்கு முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் அதிகபட்சமாக திரு. L.N. சையத் இப்ராஹீம் என்பவர் ரூ.1,37,500/- க்கு கோரியுள்ளார். அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட அதிகமாக உள்ளதால் இனம் எண். 3- ஐ L.N. சையத் இப்ராஹீம் என்பவருக்கு ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 58/ 13.08.2012 ன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின் பேரில் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு : ‘அ’ அனுமதிக்கலாம்.
‘ஆ’ அனுமதிக்கலாம்

ந.க.எண்.864/ 2012/ கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 167 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 58 நாள் 13.08.2012ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள் : கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 42 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு விடுவது - தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 67 நாள் 13.08.2012.

*******

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 42ல் இட்டேரி வீதி, சின்னவேடம்பட்டியில் மாநகராட்சி மூலம் 1326 சதுரடி அளவில் ரூ23.68 இலட்சம் செலவீட்டில் புதிதாக சமுதாயக்கூடம் கட்டப்பட்டு பயன்படுத்தும் நிலையில் உள்ளது.

மேற்படி சமுதாயக் கூடத்திற்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டில் நாளொன்றுக்கு வாடகையாக ரூ.3500/- நிர்ணயம் செய்யலாம் என உதவி நிர்வாக பொறியாளரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி சமுதாயக் கூடத்திற்கு பொது பணி துறை மதிப்பின் அடிப்படையில் நாளென்றுக்கு ரூ3500/- வீதம் வாடகையாக நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 67 நாள் 13.08.2012 ல் மாமன்றத்தின் முடிவுக்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 8417/2012/ ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 168 நாள் : 16.08.2012**

வார்டு எண் 42ல் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகையாக நாள் ஒன்றுக்கு ரூபாய் 2500 என நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

| | |
|---|---|
| பொருள் : | கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 3 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி வணிகவளாக கடைகளில் பொது விநியோக கடைக்கும் மற்றும் சுகாதார பிரிவு அலுவலகத்திற்கும் கடைகள் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக. |
| பார்வை: | வரிவிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 85 நாள் 13.08.2012 |

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 3 ல் உள்ள சுப்பிரமணியம் பாளையத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 10X16 என்ற அளவில் ஐந்து கடைகளுடன் கூடிய தரை தள வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. இக்கடைகளுக்கு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பீட்டில் மாதம் ஒன்றுக்கு ரூ2400/- வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, இக்கடைகளை பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்வதற்கு 20.06.2012 மற்றும் 25.07.2012 ஆகிய தேதிகளில் ஏலம் நடத்தப்பட்டது. இதில் அரசு மதிப்பான மாதம் ஒன்றுக்கு ரூ2400/- ஐ காட்டிலும் குறைவாகவே ஏலம் கோரப்பட்டது. இதனால் இக்கடைகளுக்கு மறு மின்ஏலம் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி வணிக வளாககடைகளில் இரண்டு கடைகள் சங்கனூர் நுகர்வோர் கூட்டுறவு துறை மூலம் நடத்தப்படும் நியாயவிலை கடைக்கு ஒதுக்கீடு செய்யக்கோரி சம்பந்தப்பட்ட துறையின் தனி அலுவலர் விண்ணப்பம் அளித்துள்ளார்.

மேலும் வார்டு எண் 1 முதல் 4 வரையிலான வார்டுகளுக்கு சுகாதார அலுவலகம் தற்போது துடியலூரில் செயல்பட்டு வருவதால் வார்டு எண் 3க்குட்பட்ட சுகாதார பணியாளர்கள் துடியலூர் சென்று மீண்டும் சுப்பிரமணியம் பாளையம் திரும்ப வரவேண்டியுள்ளது. இதனால் பணிகள் துவங்குவதற்கு காலதாமதம் ஆகிறது. எனவே மேற்படி சுப்பிரமணியம் பாளையம் வணிக வளாககடைகளில் சுகாதார பிரிவு அலுவலகம் அமைத்து தருமாறு மேற்படி 3வது வார்டின் மாமன்ற உறுப்பினர் கடிதம் அளித்துள்ளார்.

எனவே மேற்படி வணிக வளாக கடைகளில் கடை எண் 2 மற்றும் 3 னை மாதம் ஒன்றுக்கு கடை ஒன்றுக்கு ரூ.2400/- வாடகை அடிப்படையில் தனி அலுவலர் சங்கனூர் நுகர்வோர் கூட்டுறவு துறைக்கு ஒதுக்கீடு செய்யவும், மேலும் மேற்படி மாமன்ற உறுப்பினர் கோரிக்கையின் அடிப்படையில் சுப்பிரமணியம் பாளையம் வணிக வளாக கடைகளில் வார்டு எண் 3க்குட்பட்ட சுகாதாரபிரிவு அலுவலகத்திற்கு கடை எண் 4 மற்றும் 5 ஆகிய இரண்டு கடைகளை ஒதுக்கீடு செய்வதற்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 53 நாள் 13.08.2012 ல் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 6509/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 169 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 85 நாள் 13.08.2012ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

| | |
|---|---|
| **பொருள் :** | கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 26 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு விடுவது - தொடர்பாக. |
| **பார்வை:** | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 53 நாள் 13.08.2012 |

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 26ல் வெள்ளக்கிணறு பகுதியில் உள்ள தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு Phase–I ல் மாநகராட்சி மூலம் 1529 சதுரடி அளவில் ரூ 7.26 இலட்சம் செலவீட்டில் புதிதாக சமுதாயக்கூடம் கட்டப்பட்டு பயன்படுத்தும் நிலையில் உள்ளது.

மேற்படி சமுதாயக் கூடத்திற்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டில் நாளொன்றுக்கு வாடகையாக ரூ1500/- நிர்ணயம் செய்யலாம் என உதவி நிர்வாக பொறியாளரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி சமுதாயக் கூடத்திற்கு பொது பணி துறை மதிப்பின் அடிப்படையில் நாளொன்றுக்கு ரூ1500/- வீதம் வாடகையாக நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 53 நாள் 13.08.2012 ல் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 06937/2012/ ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 170 நாள் : 16.08.2012**

வார்டு எண் 26ல் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகையாக நாள் ஒன்றுக்கு ரூபாய் 1000 என நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 7**

| | |
|---|---|
| **பொருள் :** | கோவை மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 2 ல் வி.பி.வி நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு விடுவது - தொடர்பாக. |
| **பார்வை:** | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 52 நாள் 13.08.2012 |

*********

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 2ல் வி.பி.வி நகரில் மாநகராட்சி மூலம் 1631 சதுரடி அளவில் ரூ 44.80 இலட்சம் செலவீட்டில் புதிதாக சமுதாயக்கூடம் கட்டப்பட்டு பயன்படுத்தும் நிலையில் உள்ளது.

மேற்படி சமுதாயக் கூடத்திற்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டில் நாளொன்றுக்கு வாடகையாக ரூ.3100/- நிர்ணயம் செய்யலாம் என உதவி நிர்வாக பொறியாளரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி சமுதாயக் கூடத்திற்கு பொது பணி துறை மதிப்பின் அடிப்படையில் நாளொன்றுக்கு ரூ3100/- வீதம் வாடகையாக நிர்ணயம் செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 52 நாள் 13.08.2012 ல் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 06938/2012/ ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 171 நாள் : 16.08.2012**

வார்டு எண் 2 ல் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி சமுதாயக் கூடத்திற்கு வாடகையாக நாள் ஒன்றுக்கு ரூபாய் 2100 என நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

பொருள் : கோயமுத்தூர் மாநகராட்சி -தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டுகள் 77, 79 மற்றும் 86 உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளின் வாடகையை வெளிமார்க்கெட் மதிப்பின் அடிப்படையில் உயர்வு செய்தல் - தொடர்பாக

பார்வை : 1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண்.92/ நாள் 03.07.2007

2. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 77 நாள் 13.08.12

********

கோயம்புத்தூர் மாநகராட்சி 100 வார்டுகளாக விரிவுபடுத்தப்பட்டதையடுத்து வார்டு 77 மற்றும் 79 ஆகியவை முந்தைய மேற்கு மண்டலத்திற்கு உட்பட்டதாக இருந்து தற்போது தெற்கு மண்டலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் வார்டு 86 லாரிபேட்டை பகுதி கடைகள் மத்திய மண்டலத்திற்கு உட்பட்டதாக இருந்தது. தற்போது தெற்கு மண்டலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வார்டு எண்.77 சொக்கம்புதூர் பகுதியில் ஒரு கடையும், (Reg.No.7720366), 79 சுப்ரி வீதி பகுதியில் 13 கடைகளும் (Reg.No.7920133 - 7920140) (7920357 - 7920361), சலிவன் வீதியில் ஒரு கடையில் (Reg.No.7920526) வார்டு எண்.86 லாரிப்பேட்டை பகுதியில் 105 கடைகள் (Reg.No.8630477 - 8630581) ஏலம் நடத்தி ஒன்பது ஆண்டுகளுக்கு மேலானதால் பார்வையில் குறிப்பிட்ட அரசாணைப்படி வெளிமார்க்கெட் மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்யவும் வாடகை செலுத்த மறுக்கும் உரிமை தாரர்களின் கடையினை ஏலத்திற்கு கொண்டு வரவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 77 நாள் 13.08.12–ல் பரிந்துரை செய்யப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 7391/2012/A1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 172 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 77 நாள் 13.08.2012ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

| | |
|---|---|
| **பொருள் :** | வார்டு எண் 79ல் உள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி AA ஸ்கீம் ரோடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதியதாக கட்டியுள்ள 2 கடைகளை ஒன்றை நியாயவிலை கடைக்கும் மற்றொன்றை கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கும் – ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக |
| **பார்வை:** | 1) தனி அலுவலர் (கோயம்புத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம்) அவர்களின் 23.02.12ம் தேதியிட்ட கடிதம்<br>2) தனி அலுவலர் ( கோவை மாவட்ட நுகர்வோர் சுட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிமிடெட்) அவர்களின் 02.03.12ம் தேதியிட்ட கடிதம்<br>3) துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பு நாள் 27.07.2012<br>4) வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 48 நாள் 13.08.12<br>********* |

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 79 லாலி ரோடு தடாகம் ரோடு AA ஸ்கீம் ரோடு பகுதியில் மாநகராட்சி மூலம் புதியதாக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரும் நிலையில் உள்ளது. மேற்குறிப்பிட்ட பகுதியில் உள்ள கடைகளை நியாய விலை கடை நடத்த பார்வை 1–ல் காணும் கோம்புத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தனி அலுவலரும், பார்வை 2–ல் காணும் கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிமிடெட் தனி அலுவலரும் தந்து உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும் மாநகராட்சியின் சட்டத் திட்டத்திற்கு கட்டுப்பட்டு அனைத்து கட்டணங்களையும் செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளனர். மேற்படி கடைகளை இவ்விருவருக்கும் தலா ஒரு கடை வீதம் ஒதுக்கீடு செய்ய பார்வை 3–ல் காணும் துணை ஆணையாளர் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஒவ்வொரு கடையும் தலா 217.50 சதுர அடி அளவு கொண்டது. இந்த கடைகளுக்கு பொதுப்பணித்துறை (PWD) வாடகை மதிப்பில் மாதம் ரூ. 7438/– ஆக வாடகை நிர்ணயம் செய்ய சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளர் பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்படி கடைகளை மேலே குறிப்பிட்ட கோயம்புத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கும், கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கும் வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 48 நாள் 13.08.12–ல் பரிந்துரைக்கப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> அனுமதிக்கலாம் ந.க.எண். 3527/2012/பி6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 173 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 48 நாள் 13.08.2012ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்தில் உள்ள சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட்டிலுள்ள 37 x 14 ¾ சதுரடி அளவுள்ள – இதுவரை உபயோகப்படுத்தாத அறை – பொது ஏலம் விடுவது – தொடர்பாக |
|---|---|
| பார்வை | வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 49 நாள் 13.08.12 |

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 97ல் உள்ள சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட்டில் வணிக வளாக கடைகளின் முதல் மாடியில் அமைந்துள்ள 37x 14 ¾ அடி அளவுள்ள அறை இதுவரை உபயோகப்படுத்தாமல் காலியாக உள்ளது கண்டறியப்பட்டது. மேற்படி கடையை ஏலத்தில் விட வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 49 நாள் 13.08.12ல் பரிந்துரை செய்யப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> அனுமதிக்கலாம் ந.க.எண். 698A/2012/பி6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 174 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 49 நாள் 13.08.2012ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

**பொருள்** கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் – M.M.அலி மார்கெட் வணிக வளாக கடைகளின் மாத வாடகை உயர்வு செய்தல் –தொடர்பாக.

**பார்வை**

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 92 /03.07.2007
2. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 76 நாள் 13.08.12

***************

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட இமாம் அலி மார்கெட்டில் உள்ள 290 கடைகளுக்கு நீண்ட நாட்களாக வாடகை உயர்வு செய்யப்படாமலே இருந்து வருகிறது. நாளது தேதி வரை இக்கடைகளுக்கு ஒருநாள் வாடகையாக ஒரு கடைக்கு ரூ.18/– வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

எனவே பார்வையில் காணும் அரசாணைப்படி மேற்குறிப்பிட்ட 290 கடைகளுக்கு 01.04.2012 முதல் தற்காலிக சந்தை மதிப்பின் அடிப்படையில் ஒரு நாள் வாடைகையாக ரூ. 44/– ஆக உயர்வு செய்து, மாத வாடகையாக ரூ. 1320/– ஆக நிர்ணயம் செய்யவும், மாற்றியமைக்கப்பட்ட வாடகைத் தொகையினை செலுத்தாத உரிமதாரர்களின் உரிமத்தினை ரத்து செய்து மறு ஏலம் கொண்டு வரவும், 01.04.2012 முதல் இன்று வரையிலான உயர்வு செய்யப்பட்ட வித்தியாச நிலுவைத் தொகையை வசூலிக்கவும், வரி விதிப்பு மற்றும் நிதிக் குழு தீர்மானம் எண் 76 நாள் 13.08.12–ல் பரிந்துரை செய்யப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்</u> ந.க.எண். 6852/2012/A1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 175 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 76 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 12**

**பொருள்:–** கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் – வார்டு எண்.24–ல் உள்ள 3923 ச.அடி பரப்பளவு கொண்ட வ.உ.சி திருமண மண்டபத்தில் தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்டமான விலையில்லா மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் ஆகியன இருப்பு வைக்கும் குடோன் ஆகப் பயன்படுத்த வாடகை நிர்ணயம் செய்தல் – தொடர்பாக.

**பார்வை:–** வட்டாட்சியர் கோவை தெற்கு அவர்களின் கடிதம் ந.க.எண்.8633/11/ஆ8 நாள்.03.08.2012

*******************

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.24–ல் உள்ள 3923 ச.அடி பரப்பளவு கொண்ட வ.உ.சி திருமண மண்டபத்தை 96 –ம் வருடம் முதல் 2012–ம் வருடம் வரை மாநகராட்சி உபயோகப்படுத்தப்படுத்தபடாமல் விரைவு அதிரடிப்படையினரால் உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்டமான விலையில்லா மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் ஆகியன இருப்பு வைக்கும் குடோன் ஆகப் பயன்படுத்த வட்டாட்சியர் கோவை தெற்கு அவர்களின் கடிதம் ந.க.எண்.8633/11/ஆ8 நாள்.03.08.2012–ன்படி, மாத வாடகை அடிப்படையில் கேட்டு கடிதம் கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட கட்டிடத்திற்கு பொதுப் பணித்துறை மதிப்பீட்டின் படி ஒரு சதுர அடிக்கு ரூ.39.37/– வீதம் 3923/– சதுர அடிக்கு மாத வாடகையாக ரூ.1,54,448/– அல்லது ரூ.1,54,450/– நிர்ணயம் செய்யலாம் என உதவி செயற்பொறியாளர் (மேற்கு) அவர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்.

எனவே, மாத வாடகையாக ரூ.1,54,448/— அல்லது ரூ.1,54,450/—ஐ நிர்ணயம் செய்யலாம். மேலும் தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்டத்திற்காக பயன்படுத்த இருப்பதால் மேற்படி மாதாந்திர வாடகையினை குறைத்து நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் மாத வாடகையாக ரூ.50,000/— என நிர்ணயம் செய்தும், சம்பந்தப்பட்ட அரசு துறையினரால் இக்கட்டிடத்திலுள்ள மின் இணைப்பிற்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். **84** நாள் **13.8.2012**—ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து எனவே, மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு — அனுமதிக்கலாம் ந.க.எண்.8802/2012/டி2(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 176 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 84 நாள் 13.08.2012ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - உரிமம் காலம் - 9 ஆண்டுகள் முடிவடைந்த இனங்களுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி வாடகையை உயர்வு செய்தல் தொடர்பாக.

பார்வை - 1. அரசாணை எண்.147 நாள்.30.12.2000.
2. அரசாணை எண்.92 நாள்.3.07.2007.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண்.22-ல் உள்ள விவேகா மகளிர் சுய உதவிக்குழு மாதாந்திர வாடகை தொகையாக ரூ.288/-ம், B11-காவல் நிலையம் மாதாந்திர வாடகை தொகையாக ரூ.8432/-ம் வார்டு எண்.24 ஆரோக்கியசாமிரோடு(மே) உள்ள தமிழ்நாடு இசைக்கல்லூரி மாதாந்திர வாடகைத்தொகை ரூ.14509/- ம் பிரதான அலுவலகத்தில் இருந்து 1996-ம் வருடம் மண்டல அலுவலகமாக பிரிக்கப்பட்ட பொழுதிலிருந்து மாதந்திர வாடகையாக நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.288/-, ரூ.8432/-, ரூ.14509/-மட்டும் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

9- ஆண்டுகள் முடிவுற்ற இனங்கள்

| வ.எண். | வரிவிதிப்பு எண். | இனத்தின் பெயர் | தற்பொழுது செலுத்திவரும் மாதந்திர வாடகை தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | 20365 | விவேகா மகளிர் சுய உதவிக்குழு | 288 |
| 2. | 20368 | B11-காவல் நிலையம் | 8432 |
| 3. | 20369 | ஆரோக்கியசாமிரோடு(மே) தமிழ்நாடு இசைக்கல்லூரி | 14509 |

எனவே மேற்படி இனங்கள் ஒன்பது வருடங்களுக்கு மேல் நடைபெற்று வருவதால் இவ்வினங்களுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீடு பெற்று மாதாந்திர வாடகையை உயர்வு செய்வதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு அவ்வினத்தை ஒப்படைக்கவும், புதிய வாடகை அடிப்படையில் வாடகைக்கு ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் உரிமத்தை ரத்து செய்து அவ்வினங்களை மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.78 நாள்.13.08.2012-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.1476 / 2012 / அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 177 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 78 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள: மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையம் - குத்தகை இனங்கள் 2012-13-ம் ஆண்டிற்கான உரிமம் ஏப்ரல் 2012 முதல் ஜுன் 2012 முடிய நீட்டிப்பு வழங்க அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை: 1. உரிமம் ஒதுக்கீடு உத்திரவு எண்.10070 / 2010 /A1 dt.17.2.2011.
2. சென்னை உயர்நீதி மன்ற உத்திரவு W.P. எண்.29910 / 11 தேதி.10.04.2012
3. திரு.ஆர்.சிவகுமார் உயர்நீதி மன்ற வழக்கறிஞரது கருத்துரை தேதி.18.04.2012
4. ஆணையரது குறிப்பு உத்திரவு தேதி.02.05.2012.
5. இதே எண்ணிட்ட உயர்நீதி மன்ற வழக்குரைஞருக்கு 4.5.2012-ம் தேதியன்று அனுப்பப்பட்ட கடிதம்.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்குமண்டலத்திற்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையத்தில் உள்ள பேருந்து நுழைவுக்கட்டண வசூல், பொருட்கள், பாதுகாப்பு அறை, கட்டண கழிப்பிடம், குளிரூட்டப்பட்ட தங்கும் அறை ஆகியவற்றினை 17.2.2011 முதல் மூன்றாண்டுகளுக்கு திரு.M.செல்வம் என்பவர் குத்தகைக்கு எடுத்து முதல் வருடகுத்தகைத்தொகை ரூ.16,37,000/- னை செலுத்தி மேற்படி இனங்களை நடத்தி வந்தார்.

இந்நிலையில் பேருந்துகள் புதிய பேருந்துநிலையத்தினை திருப்பு முனையாக கொண்டு செயல்படாததால் தனக்கு நிதியிழப்பு ஏற்பட்டுவருவதால் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி கடந்த 8.6.2011 உள்ளிட்ட தேதிகளில் குத்தகைதாரர் திரு.M.செல்வம் விண்ணப்பித்துள்ளார்.

மேலும் மேட்டுப்பாளையம் சாலையில் கடந்த 15.6.2010 அன்று மாநகராட்சியால் திறந்துவைக்கப்பட்ட பேருந்துநிலையத்தினை திருப்பு முனையாக கொண்டு செயலாற்றுமாறு பேருந்து இயக்குநர்களுக்கு வட்டாரபோக்குவரத்து அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு ஆணை எண். 31150 / அ4 / 2012-ல் உத்திரவிடப்பட்டது.

இதனை எதிர்த்து தனியார் பேருந்து இயக்குநர்களால் தொடரப்பட்ட W.P.எண்.151616 / 2010 உள்ளிட்ட 14 உயர்நீதிமன்ற வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட இடைகால உத்திரவின் காரணமாக பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்தினை திருப்பு முனையாக கொண்டு செயல்படாமல் தொடர்ந்து காந்திபுரம் பேருந்து நிலையம் வரை சென்று வருகிறது. மேலும் பேருந்துகளை புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்துசெல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இவ்வலுவலகத்தின் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 7.12.2011 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. இருப்பினும் இதுவரை பேருந்துகள் காந்திபுரம் வரை தொடர்ந்து சென்று வருகிறது.

பார்வை (2)ல் காணும் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில் திரு.M.செல்வம், மேட்டுப்பாளையம் ரோடு பேருந்து நிலைய குத்தகைதாரர் அவர்களின் 13.8.2011-ம் தேதிய கோரிக்கை மனுவை 3-ம் பிரதிவாதியான ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, சட்டப்படி பரிசீலனை செய்து மனுதாரருக்கு வாய்ப்பளித்து அவரது மனுவின் மீது தீர்ப்பு கிடைக்கப்பெற்ற 4 வாரகாலத்திற்குள் உரிய உத்திரவுகள் பிறப்பிக்க தெரிவித்து ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வை (3)ல் காணும் திரு.R.சிவக்குமார் மாநகராட்சி வழக்கறிஞர் அவர்களின் கடிதத்தில் மனுதாரரின் கோரிக்கை மனு நாள் 13.8.2011 தொடர்பாக ஏற்கனவே நீதிப்பேராணை மனு எண்.16506 / 2010 மற்றும் பல்வகை மனு எண் 2 / 2010-ன் வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் 18.1.2011 இடைக்கால உத்திரவு பிறப்பித்துள்ளதாகவும், மேலும் மேற்படி வழக்கு நீதிப்பேராணை மனு எண்.16506 / 2010 மற்றும் தொடர்பான தொகுதி வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றம் இறுதி உத்திரவு பிறப்பித்துள்ளதாகவும், அவ்வுத்திரவின் நகல் சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற உடன் அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட சூழ்நிலையில் ஆணையர் அவர்கள் மனுதாரர் திரு. M.செல்வத்தின் மனு நாள் 13.8.2011-ன் மீது எவ்வித உத்திரவுகளும் பிறப்பிக்கலாம் எனவும் இருப்பினும் நீதிப்பேராணை மனு எண். 14506 / 2010 மற்றும் தொகுதி வழக்குகளின் இறுதி உத்திரவின் அடிப்படையில் மனுதாரர் மனுமீது உரிய உத்திரவுகள் பிறப்பிக்கலாம் என கருத்துரை தெரிவித்துள்ளார்.

பார்வை 4-ல் காணும் ஆணையரது 24.4.2012-ம் தேதி உத்திரவில் குத்தகைதாரர் திரு.M.செல்வம் என்பவரை 2.5.2012-ம் தேதியன்று நேரில் ஆஜராக தெரிவித்தார். அதன்படி மேற்படி குத்தகைதாரரும் 2.5.2012-ம் தேதியன்று நேரில் ஆஜரானார்.

பார்வை 5-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் (Operators Case Judgement) தொகுதி வழக்குகளின் இறுதி உத்திரவு நகலினை வழங்குமாறு கேட்டு உயர்நீதி மன்ற வழக்குரைஞருக்கு 4.5.2012-ம் தேதியன்று கடிதம் அனுப்பப்பட்டது. இதுநாள் வரை எந்தவிதமான பதிலும் கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில் மேற்படி குத்தகைதாரா் திரு.M.செல்வம் தனக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதன் காரணமாக அரசு தரப்பில் பேருந்துகளை புதிய பேருந்து நிலையத்தினை திருப்பு முனையாக கொண்டு செயல்பட வைக்க இயலாததாலும் 2012-13-ம் ஆண்டிற்கு 2011-12-ம் ஆண்டு குத்தகைதொகையில் 50 சதவீதம் கருணை அடிப்படையில் தள்ளுபடி செய்து தருமாறு கோரியுள்ளாா்.

மேலும் ஆணையரின் உத்திரவின்படி மேற்படி இனத்தை கடந்த வருட குத்தகைத்தொகையில் 5 சதவீதம் கூடுதலாக வைத்து (ஏப்ரல் 2012 - ஜுன் 2012) கடந்த மூன்று மாதமாக தொகை செலுத்தி நடத்தி வருகிறாா். எனவே இதுவரை நீட்டிப்பு வழங்கபட்டதற்கும் மேலும் நீதி மன்ற உத்திரவு வரும்வரை சம்பந்தப்பட்டவரே தொடந்து நடத்துவதுதற்கும் மேற்குறிப்பிட்ட தொகையினை மாதந்தொறும் செலுத்துவதற்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மானம் எண்.45 நாள்.13.08.2012-ல் பொருள் அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.10070 / 2010 / ஏ1(மே)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் : 178 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண் 45 நாள் 13.08.2012ன் தீா்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 15**

பொருள்: கோயம்புத்தூா் மாநகராட்சி – மேற்கு மண்டலம் வாா்டு எண்.15, மருதமலை மெயின் ரோடு பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் காவல் துறையினரால் சோதனைச் சாவடி அமைக்க 20’x20’ அளவில் இடம் கோரியது – தொடா்பாக.

பாா்வை காவல் ஆய்வாளா், பி2 ஆா்.எஸ்.புரம் காவல் நிலையம் அவா்களின் விண்ணப்பம் நாள் : 16.07.2012

---------

கோயம்புத்தூா் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வாா்டு எண்.15, மருதமலை மெயின் ரோடு, பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் காவல்துறைக்கு சோதனைச் சாவடி அமைக்க 20’x20’ மொத்தம் 400 சதுரடி அளவில் இடம் கோரியதில் பொதுப்பணித்துறை மதிப்பின்படி சதுரடிக்கு ரூ.25/-கீழ்க்கண்டவாறு

| இடம் | சதுரடி | பொதுப்பணித்துறை சதுரடி மதிப்பு | மாத வாடகை |
|---|---|---|---|
| மருதமலை மெயின் ரோடு, முல்லை நகா் | 20’x20’=400 | ரூ.25 /- | 10,000 |

பொதுப்பணித்துறை மற்றும் சதுரடி மதிப்பின்படி 400 சதுரடி இடத்திற்கு மாத வாடகை ரூ.10,000 /- நிா்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டத்தில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.82 நாள்: 13.08.2012-ன் படி அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 7826/2012/எச்.1(மே)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் : 179 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண் 82 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

பொருள்: கோயம்புத்தூா் மாநகராட்சி - மேற்கு மண்டலம் 2012-15-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012, 21.03.2012,29.3.2012,11.4.2012, 25.4.2012 மற்றும் 10.5.2012,20.6.2012,25.7.2012-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது - தொடா்பாக.

பாா்வை: 1. ஏற்கனவே நடைபெற்ற மின்ஏல நாட்கள் 14.03.2012, 21.03.2012, 29.3.2012, 11.4.2012 25.4.2012,10.5.2012 மற்றும் 20.6.2012
2. எட்டாவது மறுஏல நாள்.25.7.2012

****

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2012-2015 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கனவே ஏழு முறை 14.03.2012, 21.03.2012, 29.3.2012, 11.4.2012, 25.4.2012, 10.5.2012 & 20.6.2012 ஆகிய தேதிகளில் ஏலம் நடைபெற்றது. கீழ்கண்ட 3 இனங்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏல மதிப்பினை விட குறைந்தபட்ச ஏலத்தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. எனவே இவ்வினங்களை 25.7.2012-ம் தேதியன்று மீண்டும் 8-வது முறையாக பொது மறு மின் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதில் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் வரப்பெற்ற விபரங்கள் கீழ்கண்டவாறு ஆகும்.

8-வது முறையாக நடைபெற்ற மறு ஏலத் தேதி – 25.7.2012

| வ. எண் | குத்தகை இனங்கள் | கடந்த வருட ஏலத் தொகையில் 5% நிர்ணயம் செய்யப் பட்ட தொகை | 25.7.2012 அன்று நடைபெற்ற ஏலதாரர் பெயர் | 25.7.2012 அன்று நடை பெற்ற ஓப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச மின்ஏலக் கேள்வி தொகை / ஓப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வருடாந்திர அடிப்படையில் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு) | 816291 | S.மூர்த்தி<br>K.நடராஜன்<br>M.A.கலீல்ரஹ்மான்<br>A.அன்வர்பாஷா<br>K.A.அபுதாஹிர்<br>T.S.அம்பிராஜ்<br>K.முனியாண்டி | 5,11,000<br>4,60,000<br>4,51,000<br>4,13,000<br>4,10,000<br>4,05,000<br>3,00,000 | 5,11,000 |
| 2. | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 22,36,500 | காளியப்பன்<br>C.செல்வம்<br>S.முஹம்மதுரபீக்<br>K.நடராஜன்<br>M.மனோகரன்<br>T.S.அம்பிராஜ் | 6,51,000<br>6,00,900<br>4,80,000<br>4,66,666<br>4,50,000<br>3,50,000 | 6,51,000 |
| 3. | மேட்டுப்பாளையம் ரோடு நவீன பேருந்து நிலையத்தில் உணவகம், சமையல் அறை மற்றும் பண்டக அறை நடத்தும் உரிமம் (மாதாந்திர வாடகை அடிப்படையில்) | 73,500 | ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில் லை | - | - |

வரிசை எண்.1-ல் உள்ள காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் இனத்திற்கு 29.11.2011, 25.01.2012 ஆகிய தேதிகளில் ஏற்கனவே ஏலம் நடத்தப்பட்டதில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. 14.3.2012, 21,3,2012, 29.03.2012 மற்றும் 11.4.2012, 25.4.2012-ல் (Base Value) நிர்ணயித்த மதிப்பினை விட குறைந்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேலும் 25.4.2012-ந் தேதியில் பெறப்பட்ட ஏலத்தொகை ரூ.5,05,050/-க்கு கோரப்பட்டது. 25.7.2012-ம் தேதிய மறு ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5,11,000/-க்கு கோரப்பட்டுள்ளது. இத்தொகையானது ஏற்கனவே 25.4.2012-ல் கோரப்பட்ட ஏலத்தொகையினை விட கூடுதலான தொகையாகும். மேற்படி ஏல இனம் சீசன் காலமான கோடை காலத்தில்தான் அதிகப்படியான கட்டணம் வசூலாகும். மற்ற காலங்களில் குறைவான அளவு தான் கட்டணம் வசூலாகும். மேலும் கோடை காலம் முடிவுற்றதும் இந்த இனத்தை ஏலத்தில் கொண்டு வரும் போது அச்சமயம் ஒருவரும் ஏலத்தில் கலந்து கொள்வதில்லை. மேலும் மாநகராட்சியால் துறைமூலமாக வசூல் மேற்கொள்ள நேரிட்டால் அதற்கென நீச்சல் தெரிந்து (Trainee Staff) பயிற்சியாளர் ஒருவரையும் மற்றும் கட்டணம் வசூலிக்க ஒரு நபரும் நியமிக்கப்படவேண்டியுள்ளது.

வரிசை எண்.2-ல் உள்ள மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இருசக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த 14.03.2012, 21.03.2012, 29.03.2012,11.4.2012, 25.4.2012 10.5.2012, 20.06.2012 மற்றும் 25.07.2012 ஆகிய தேதிகளில் பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை விட குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. 7-வது ஏலத்தில் அதிகபட்ச தொகையாக ரூ.6,26,300,-க்கு கோரப்பட்டுள்ளது. தற்பொழுது 8-வது ஏலத்தில் அதிகபட்ச தொகை ரூ.6,51,000/- க்கு கோரப்பட்டது. இது மாநகராட்சி நிர்ணய தொகையை விட குறைவு. எனவே 1.4.2012 முதல் துறை வாரியான வசூல் மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி வாகனம் நிறுத்தும் இடத்திற்கு ஒரு நாளுக்கு சராசரியாக ரூ.2240/- வசூலிக்கப்பட்டு வருகிறது. (ரூ.2240x365 நாட்கள்=ரூ.8,17,600/-) 25.7.2012-ந் தேதிய 8-வது மறுமின் ஏலத்தில் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியாக ரூ.6,51,000/- பெறப்பட்டுள்ளது. இத்தொகையானது மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட (Base value) (ரூ.21,21,210/-) தொகையை விட குறைவாக உள்ளது. மேலும் துறைமூலமாக வசூலிக்கப்பட்டு வரும் தொகையை விடவும் குறைவாக உள்ளது.

வரிசை எண்.3-ல் உள்ள மேட்டுப்பாளையம் ரோடு நவீன பேருந்து நிலையத்தில் உணவகம், சமையல் அறை மற்றும் பண்டக அறை நடத்தும் உரிமம் (மாதாந்திர வாடகை அடிப்படையில்) இனத்திற்கு 25.7.2012-ந் தேதியன்று முதல் முறையாக மறு ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டதில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை.

ஆணையாளர் அவர்களின் 30.7.2012-ம் தேதிய உத்திரவில் மேற்குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்களில் வரிசை எண்.1 ஏற்பளிக்கலாம் எனவும், வரிசை எண்.2-ஐ மறு ஏலம் கோரலாம் எனவும், மேலும் வரிசை எண்.3-ஐ ஏலம் விடப்பட்டு எவரும் கலந்துகொள்ளாததால் பல்வேறு அரசு துறையினர் அலுவலகத்திற்கு இடம் கோரி வருவதால் ஏதாவது ஒரு துறைக்கு ஒதுக்கீடு செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார். வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் .70 நாள்.13.08.2012-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : வ.எண்.1 முதல் 3 வரை அனுமதிக்கலாம்

ந.க.எண்.497/2012/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 180 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 70 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

-------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 17**

**பொருள்:–** கோயம்புத்தூர் மாநகராட்சி–மேற்கு மண்டலம்–வார்டு எண்.8ல் உள்ள கவுண்டம்பாளையம் பிரிவு அலுவலகத்தில் காலியாக உள்ள முதல் தளத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்து–வாடகை நிர்ணயம் செய்தல்–தொடர்பாக

*******************

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.**8**ல் உள்ள கவுண்டம்பாளையம் பிரிவு அலுவலக கட்டிடத்தில் முதல் தளத்தில் ஒரு பகுதியான 6.80 x 6.75 மீ அளவில் அலுவலக அறை மொத்த பரப்பளவு **494** சதுரடி பரப்பளவில் உள்ளது**.** மேற்க்கண்ட கட்டிடத்தை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அலுவலக பயன்பாட்டுக்கு கடிதம் எண்.0027/AEE/12 நாள்.**26.06.2012**ல் மாத வாடகை அடிப்படையில் கேட்டு கடிதம் கொடுத்துள்ளனர்**.**

மேற்கண்ட கட்டிடத்திற்கு பொதுப் பணித்துறை மதிப்பீட்டின் படி ஒரு சதுர அடிக்கு ரூ.**17.03/–** வீதம் **494** சதுர அடிக்கு மாத வாடகையாக ரூ.**8413/–** அல்லது ரூ. **8415/–** நிர்ணயம் செய்யலாம் என உதவி செயற்பொறியாளர் (மேற்கு) அவர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்**.**

எனவே, மாத வாடகையாக ரூ. **8415/–** ஐ நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் மாத வாடகையாக ரூ.**8415/–** என நிர்ணயம் செய்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்**. 44** நாள் **13.8.2012–**ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது**.**

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்**.7602/2012/**டி**1(**மே**)**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 181 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 44 நாள் 13.08.2012ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

-------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 18**

பொருள்:– கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் – வார்டு எண்.**12–**ல் உள்ள இராமலிங்க நகர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான **53.76** ச.மீ பரப்பளவு கொண்ட கட்டிடத்தை நியாய விலைக் கடை பயன்பாட்டிற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்து – வாடகை நிர்ணயம் செய்தல் – தொடர்பாக

*******************

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் வார்டு எண்.12–ல் உள்ள இராமலிங்க நகர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான **53.76** ச.மீ பரப்பளவு கொண்ட கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நியாய விலைக் கடை பயன்பாட்டிற்கு கடிதம் எண்.ந.க.எண்.**406/11/**சி**1** நாள்.**04.08.2012**ல் மாத வாடகை அடிப்படையில் கேட்டு கடிதம் கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட கட்டிடத்திற்கு பொதுப் பணித்துறை மதிப்பீட்டின் படி ஒரு சதுர அடிக்கு ரூ.**18.61/–** வீதம் **53.76** ச.மீ–க்கு மாத வாடகையாக ரூ.**10,758/–** நிர்ணயம் செய்யலாம் என உதவி செயற்பொறியாளர் (மேற்கு) அவர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்.

எனவே, மாத வாடகையாக ரூ. **10,758/–** ஐ நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் மாத வாடகையாக ரூ.**10758/–** என நிர்ணயம் செய்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். **79** நாள் **13.8.2012**–ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண்.8852/2012/டி1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 182 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 79 நாள் 13.08.2012ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி -மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - மூன்றாண்டு உரிம காலம் முடிவுற்ற கடைகளுக்கு 15 % உயர்வு செய்தும் மற்றும் 9 வருடம் முடிவடைந்த கடைகளுக்கு பொதுபணித்துறை மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07

2. மா.மன்ற தீர்மான எண்.253 நாள். 27.2.2012

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாக கடைகள் மேற்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை இருபதாண்டுகள்) எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன்படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி கடைகளின் உரிமக்காலம் கீழ்கண்ட தேதிகளில் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பிக்க பார்வை 1-ல் காணும் அரசாணை (நிலை) எண். 92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07-ன் படி 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும், பார்வை 2-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி பொதுப்பணித்துறை நிர்ணயம் செய்த மதிப்பீட்டின்படி வாடகை உயர்வு செய்த உரிம கட்டணம் அடங்கிய பட்டியல் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம்
வணிக வளாக கடைகள் விபரங்கள்

### அ. மூன்று வருடம் முடிவுற்ற கடைகள்

இடம் : கிருஷ்ணசாமி ரோடு தெற்கு – 17 x 10 = 170 ச.அடி

இடம் : காந்திபார்க் புதிய கடைகள் - 10 x 22 = 220 ச.அடி

| வ. எண் | வ.வி.எண். | கடை எண் | பெயர் | கடை ஒதுக் கீடு செய்யப் பட்ட நாள் | உரிமம் காலம் முடியும் நாள் | உரிமம் புதிப்பிக்கப் பட வேண்டிய நாள் | மாத வாடகை | அரசு ஆணை எண். 92 ந.நி மற்றும் கு.வ.துறை நாள் 3.7.07-ன் படி 15% உயர்வு செய்த மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 20519 | 1 | K.தேவசேனாபதி | 7.5.09 | 6.5.12 | 7.5.12 | 9500 | 10925 |
| 2. | 20520 | 5 | M.மகுடபதி | 28.7.09 | 27.7.12 | 28.7.12 | 8750 | 10063 |
| 3. | 20521 | 7 | யு. ஸ்ரீதர் | 7.5. 09 | 6.5.12 | 7.5.12 | 6050 | 6958 |
| 4. | 20165 | 13 | T.செல்வதுரை | 7.10.08 | 6.10.11 | 7.10.11 | 3900 | 4485 |

இடம் : தடாகம் ரோடு கடைகள் - 20 x 11 = 220 ச.அடி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | 20221 | 15 | என்.பாலசுந்தரம் | 15.5.09 | 14.5.12 | 15.5.12 | 2700 | 3105 |
| 6. | 20222 | 16 | என். அன்பழகன் | 15.5.09 | 14.5.12 | 15.5.12 | 2700 | 3105 |
| 7. | 20230 | 24 | பி.பாலசுப்ரமணியம் | 7.5.09 | 16.5.12 | 17.5.12 | 2750 | 3163 |

இடம் : தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி (வடக்கு) – 20 x 11 = 220 ச.அடி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8. | 20524 | 8 | வி.ஜெகநாதன் | 11.5.09 | 10.5.12 | 11.5.12 | 3500 | 4025 |

## ஆ. ஆறு வருடம் முடிவுற்ற கடைகள்

இடம் : கிருஷ்ணசாமி ரோடு வடக்கு – 17 x 10 = 170 ச.அடி

| வ. எண் | வ.வி. எண். | கடை எண் | பெயர் | கடை ஒதுக்கீடு செய்யப் பட்ட நாள் | உரிமம் காலம் முடியும் நாள் | உரிமம் புதிப்பிக்கப் பட வேண்டிய நாள் | மாத வாடகை | அரசு ஆணை எண். 92 ந.நி மற்றும் கு.வ.துறை நாள் 3.7.07-ன் படி 15% உயர்வு செய்த மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 20025 | 8 | கே.தேவிகா | 23.5.05 | 22.5.11 | 23.5.11 | 5175 | 5951 |
| 2. | 20517 | 9 | கே.கனகசபாபதி | 28.11.05 | 27.11.11 | 28.11.11 | 5980 | 6877 |

இடம் : ஆரோக்கியசாமி ரோடு கடைகள்- 24 x 11 = 264 ச.அடி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | 20515 | 22 | பி.எல்.ராமசாமி | 16.7.05 | 15.07.11 | 16.07.11 | 1507 | 1733 |

இடம் : மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட் - 15 x 10 = 150 ச.அடி (புதிய கடைகள்)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4. | 20326 | 2 | எம்.ஏ.குத்தூப் | 1.4.05 | 31.3.11 | 1.4.11 | 1259 | 1448 |
| 5. | 20327 | 3 | எம்.ஏ.குத்தூப் | 1.4.05 | 31.3.11 | 1.4.11 | 1898 | 2183 |
| 6. | 20332 | 8 | ஆர்.சுப்பிரமணியம் | 1.4.05 | 31.3.11 | 1.4.11 | 1242 | 1428 |
| 7. | 20333 | 9 | ஆர்.எம் வெள்ளையன் | 23.9.04 | 22.9.10 | 23.9.10 | 1277 | 1469 |
| 8. | 20334 | 10 | எம்.மனோகரன் | 1.4.05 | 31.3.11 | 1.4.11 | 1265 | 1455 |
| 9. | 20335 | 11 | எம்.மனோகரன் | 1.4.05 | 31.3.11 | 1.4.11 | 1219 | 1402 |
| 10. | 20336 | 12 | எம்.ஏ.குத்தூப் | 1.4.05 | 31.3.11 | 1.4.11 | 1248 | 1435 |
| 11. | 20337 | 13 | N.சந்திரன் | 1.6.06 | 1.6.12 | 2.6.12 | 2347 | 2699 |
| 12. | 20338 | 14 | பாலசரவணன் | 28.3.06 | 28.3.12 | 29.3.12 | 2335 | 2685 |
| 13. | 20339 | 15 | பத்ருதீன் | 9.6.06 | 9.6.12 | 10.6.12 | 2414 | 2776 |
| 14. | 20340 | 16 | I.P.பழனிசாமி | 10.1.06 | 9.1.12 | 10.1.12 | 2380 | 2737 |
| 15. | 20341 | 17 | ஆ.லோகமூர்த்தி | 28.3.06 | 27.3.12 | 28.3.12 | 2645 | 3042 |
| 16. | 20342 | 18 | ஏ.பாபுலால் | 31.10.05 | 30.10.11 | 31.10.11 | 2380 | 2737 |
| 17. | 20343 | 19 | அண்ணாமலை | 27.1.06 | 26.1.12 | 27.1.12 | 2335 | 2685 |
| 18. | 20344 | 20 | அசோகன் | 27.1.06 | 26.1.12 | 27.1.12 | 2335 | 2685 |
| 19. | 20345 | 21 | அப்துல்ரசாத் | 27.1.06 | 26.1.12 | 27.1.12 | 2335 | 2685 |
| 20. | 20346 | 22 | அப்துல் அஜீஸ் | 27.3.06 | 26.3.12 | 27.3.12 | 2381 | 2738 |
| 21. | 20347 | 23 | சாகுல் ஹமீது | 28.3.06 | 27.3.12 | 28.3.12 | 2381 | 2738 |
| 22. | 20348 | 24 | அக்பர்அலி | 28.3.06 | 27.3.12 | 28.3.12 | 2414 | 2776 |
| 23. | 20350 | 26 | ஆர்.சுப்பிரமணி | 1.11.05 | 31.10.11 | 1.11.11 | 3904 | 4490 |
| 24. | 20351 | 27 | எம்.மனோகரன் | 1.11.05 | 31.10.11 | 1.11.11 | 3968 | 4563 |
| 25. | 20352 | 28 | எம்.ஏ.குத்துப் | 31.10.05 | 31.10.11 | 1.11.11 | 3954 | 4547 |
| 26. | 20353 | 29 | பி.அமீர் உசேன் | 31.10.05 | 31.10.11 | 1.11.11 | 4100 | 4715 |
| 27. | 20354 | 30 | செல்லகுட்டி | 10.1.06 | 9.1.12 | 10.1.12 | 4364 | 5019 |
| 28. | 20355 | 31 | சி.பி.சுமத்திரா | 31.10.05 | 31.10.11 | 1.11.11 | 3901 | 4486 |
| 29. | 20356 | 32 | ஏ.கிருஷ்ணன் | 31.10.05 | 31.10.11 | 1.11.11 | 3968 | 4563 |

இடம் : தடாகம் ரோடு கடைகள் - 20 x 11 = 220 ச.அடி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 30. | 20231 | 25 | எம்.உதயகுமார் | 1.9. 05 | 31.08.11 | 1.09.11 | 1415 | 1627 |
| 31. | 20235 | 28 | கே.பாலசுப்பிரமணியம் | 9.9. 06 | 9.06.12 | 10.6.12 | 1645 | 1892 |
| 32. | 20236 | 29 | எஸ்.சண்முகம் | 15.7.05 | 14.07.11 | 15.07.11 | 1409 | 1620 |
| 33. | 20237 | 30 | எஸ்.பெருமாள் | 9.6.06 | 9.6.12 | 10.6.12 | 1645 | 1892 |

இடம் : தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி (வடக்கு) – 20 x 11 = 220 ச.அடி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 34. | 20313 | 1 | ஜெ.செல்லத்துரை | 25.8.06 | 24.8.12 | 25.8.12 | 2122 | 2440 |
| 35. | 20317 | 5 | ஓ. இதயதுல்லா | 25.8.06 | 25.8.12 | 26.8.12 | 2415 | 2777 |

இடம் : தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி (தெற்கு) - 20 x 11 = 220 ச.அடி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 36. | 20322 | 2 | கே.முருகன் | 29.5.06 | 28.5.12 | 29.5.12 | 1794 | 2063 |
| 37. | 20516 | 5 | எம்.மனோகரன் | 25.8.06 | 24.8.12 | 25.8.12 | 1955 | 2248 |

இடம் : மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மாாக்கெட் - 15 x 10 = 150 ச.அடி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 38. | 20131 | 79 | வி.நடராஜ் | 31.10.05 | 30.10.11 | 31.10.11 | 2335 | 2685 |

## இ. ஒன்பது வருடம் முடிவுற்ற கடைகள்

இடம் : பாரதி பார்க் ரோடு – 12 ½ x 10 = 125 ச.அடி

| வ. எண் | வ.வி. எண். | கடை எண் | பெயர் | கடை ஒதுக் கீடு செய்யப் பட்ட நாள் | உரிமம் காலம் முடியும் நாள் | உரிமம் புதிப்பிக்கப் பட வேண்டிய நாள் | மாத வாடகை | அரசு ஆணை எண். 92 ந.நி மற்றும் கு.வ.துறை நாள் 3.7.07-ன் படி 15% உயர்வு செய்த மாத வாடகை | பொதுப் பணித் துறை மூலம் நிர்ணயிக்கப் பட்ட மாத தொகை (மா.மன்ற தீர்மான எண்.253 நாள். 27.2.2012) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 20007 | 7 | A.சண்முகசுந்தரி | 3.2.03 | 27.3.12 | 28.3.12 | 2249 | 2586 | 2250 |
| 2. | 20008 | 8 | M.சென்னியப்பன் | 3.2.03 | 27.3.12 | 28.3.12 | `3306 | 3802 | 2250 |

இடம் : டி.பி.ரோடு - 16 ½ x 11 = 18 ½ ச.அடி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | 20039 | 1 | டி.சித்தார்தன் | 24.4.02 | 20.1.11 | 21.1.11 | 5951 | 6844 | 6370 |

இடம் : ஆரோக்கியசாமி ரோ டு மேற்கு – 10 ¾ x 20 = 215 ச.அடி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4. | 20278 | 24 | ஜெயந்தி | 1.11. 05 | 31.10.11 | 1.11.11 | 4761 | 5475 | 6128 |
| 5. | 20279 | 25 | வில்சன் | 1.11. 05 | 31.10.11 | 1.11.11 | 3717 | 4275 | 6128 |

மேற்படி அ, ஆ வரிசையிலுள்ள கடைகளுக்கு அரசு ஆணையின்படி ஏற்கனவே உள்ள மாதவாடகையில் 15% வாடகை உயர்வு செய்யவும், இ- வரிசையிலுள்ள கடை எண். 7,8,1-க்கு கடைகளுக்கு பொதுப்பணித்துறை மூலம் நிர்ணயிக்கப்பட்ட வாடகையை விட 15% உயர்வு செய்யப்பட்ட வாடகை அதிகமாக உள்ளதால், அவ்வாடகையையே உயர்வு செய்யவும், இ-வரிசையிலுள்ள கடை எண். 24, 25-க்கு பொதுப்பணித்துறை மூலம் நிர்ணயிக்கப்பட்ட வாடகையை உயர்வு செய்யவும், புதுப்பிக்க தவறும் உரிமைதாரர்களின் உரிமத்தினை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வருவதற்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் .47 நாள்.13.08.2012-ன் படி அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அ, ஆ, இ அனுமதிக்கலாம் ந.க.எண்.12497/08/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 183 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 47 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

பொருள் : வணிகவளாக கடைகள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - அவினாசி ரோடு வணிக வளாகம் கடைகள் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை : 1.அரசாணை எண் 147, ந.நி.ம.கு.வ.(நநி4) துறை, நாள். 30.12.2000
2. அரசாணை எண். 92 நாள்.03.07.2007
3. வ..வி.ம,நி.குழு.தீர்மான எண்.65. நாள்.13.08.2012.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட அவினாசிரோடு வணிகவளாகம் கடைகளை உரிமையாணைதாரர்களிடம் ஒப்படை செய்யப்பட்டு ஒன்பது வருடங்களுக்கு மேலாகிறது.

1. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ.40,713/- மாத வாடகை அடிப்படையில் தரைதளம் ஒதுக்கீடு செய்து 9 ஆண்டுகள் முடிவடைந்துள்ளதால் தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை உயர்வு செய்யலாம்.

2. மத்திய அரசு நிறுவனமான பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு 14.09.2008-ல் ஒப்படை செய்யப்பட்டு மூன்று வருடங்கள் 14.09.2011-வுடன் முடிவடைவதால் வாடகை 15.09.2011 முதல் 31.03.2014 வரை 15 சதவீதம் உயர்வு செய்யலாம்.

3. திரு.சபேர் அலி என்பவருக்கு கடை எண்.22-க்கு ஒப்படை செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்து விட்டதால் 01.06.2011 முதல் 31.03.2014 வரையான காலத்திற்கு 15% உயர்வு செய்யலாம். கடை எண் 23-க்கு ஒப்படை செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் 30.09.2012-ல் முடிவடைவதால் 01.10.2012 முதல் 31.03.2015 வரையிலான காலத்திற்கு 15% உயர்வு செய்யலாம்.

4. ''பிரஸ் கிளப்'' அமைப்பிற்கு தீர்மான எண்.171 நாள்.29.12.2009-ல் 4 கடைகள் (5,10,20 மற்றும் 21) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கடை எண்.5 | - | 418 ச.அடி |
| கடை எண்.10 | - | 206 ச.அடி |
| கடை எண்.20 | - | 206.25 ச.அடி |
| கடை எண்.21 | - | 206.25 ச.அடி |

மேற்கண்ட ''பிரஸ் கிளப்'' அமைப்பிற்கு இரண்டு கடைகள் மட்டும் ஒதுக்கீடு செய்து, மீதம் இரண்டு கடைகளை ஏலத்திற்கு கொண்டு வரவும், குறைந்தபட்ச மாத வாடகையினை ரூ.661 லிருந்து உயர்த்தி நிர்ணயம் செய்யலாம் .

5. இதர கடைகளுக்கு தற்பொழுது நிலவும் சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம்.

6. மாநகராட்சி வழக்கறிஞர், சென்னை அவர்களின் 21/07/2012 ம் தேதிய கருத்துரைப்படி (கடை எண்.1,2,4,8,15 மற்றும் 16) இதில் நீதிமன்ற தீர்ப்புக்குட்பட்டு வாடகையினை உயர்வு செய்யலாம் என குறிப்பிட்டுள்ளதால் மேற்படி கடைகளுக்கு மற்ற கடைகளுக்கு உயர்வு செய்யப்பட்டது போல் வாடகை உயர்வு செய்யலாம்.

மேற்கண்ட கடைகளுக்கு அரசின் ஆணை எண்.92 ந.தி.ம.கு.வ துறை, நாள்.03.07.2007-ன்படி தற்போதைய சந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்வதற்கும்,சேவை வரி 12.36 சதவீதத்தினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் ஒப்படைக்கவும், ஒப்புக் கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுத்திட அனுமதி வேண்டி வரி வதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 13.08.2012-ம் தேதிய தீர்மான எண்.65-ல் வரிசை எண்.4-ல் உள்ள கடைகள் குறித்து ஆய்வு செய்து மீண்டும் வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிசீலனைக்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது. பிற கடைகளுக்கு அலுவலகக் குறிப்பை ஏற்று வாடகை உயர்வு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.5253/12/அ2(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 184 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 65 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி -மத்திய மண்டலம் - வார்டு எண். 84-ல் கெம்பட்டி காலனி தர்மராஜா கோவில் வீதி மாநகராட்சி திருமண மண்டபம் எதிரில் அமைந்துள்ள வார்டு அலுவலக கட்டிடம் காலியாக உள்ளதை தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் இயங்கி வரும் அமுதம் அங்காடி எண். 49க்கு வாடகைக்கு-ஒதுக்கீடு செய்தல்- மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை : 1.முதுநிலை மண்டல மேலாளர் அவர்களின் கடித எண்.3024/11/C1 நாள்.12/01/2012.

2. வ..வி.ம,நி.குழு.தீர்மானஎண்.66. நாள்.13.08.2012.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.84-ல் கெம்பட்டி காலனி தர்மராஜா கோவில் வீதி மாநகராட்சி திருமண மண்டபம் எதிரில் அமைந்துள்ள வார்டு அலுவலக கட்டிடம் காலியாக உள்ளதை தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் இயங்கி வரும் அமுதம் அங்காடி எண்.49க்கு வாடகைக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு அதன் முதுநிலை மண்டல மேலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி கடைக்கு பொதுப் பணிதுறை வாடகை மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை மாதாந்திர வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | கடையின் அமைவிடம் | மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை.ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 84ல் கெம்பட்டி காலனி தர்மராஜா கோவில் வீதி மாநகராட்சி திருமண மண்டபம் எதிரில் அமைந்துள்ள வார்டு அலுவலக கட்டிடம். | 544.55ச.அ | 16.11 | 8775/- |

எனவே மேற்படி அரசாங்க மாத வாடகை மதிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் இயங்கிவரும் அமுதம் அங்காடி எண்.49-க்கு மாத வாடகை ரூ.**8775/-** என ஒதுக்கீடு செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 13.08.2012-ம் தேதிய தீர்மான எண்.66-ல் அலுவலக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.451/12/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 185 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 66 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் உக்கடம் பேருந்துநிலையம் தமிழ் புத்தக கடைகளுக்கு உரிமம் புதுப்பித்து வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

பார்வை : 1.அரசாணை(நிலை)எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
2. வ..வி.ம.நி.குழு.தீர்மான எண்.73. நாள்.13.08.2012.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம், உக்கடம் பேருந்துநிலையம் கடைகளில் மூன்றாண்டு உரிம காலம் முடிவடைகிறது. மேற்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை இருபதாண்டுகள் ) எண். 147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.157 நாள். 29.08.2008 படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.07-ன் படி புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்ய உரிம கட்டணம் அடங்கிய பட்டியல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. இடம் : காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம்

| வ. எண் | பெயர் | உரிமம் காலம் முடியும் நாள் | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டிய காலம் | மாத வாடகை ரூபாய் | 15% உயர்வு செய்த மாத வாடகை ரூபாய் |
|---|---|---|---|---|---|
| 1. | விஜயா பதிப்பகம் | 30.09.2011 | 01.10.2011 முதல் 31.03.2014 வரை | 200/- | 230/- |
| 2. | நியூ செஞ்சுரி புத்தக நிலையம் | 30.09.2011 | 01.10.2011 முதல் 31.03.2014 வரை | 200/- | 230/- |

2. இடம் : உக்கடம் பேருந்து நிலையம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கீதா பப்ளிகேஷன்ஸ் | 30.09.2011 | 01.10.2011 முதல் 31.03.2014 வரை | 200/- | 230/- |

மேற்கண்ட கடைகளுக்கு அரசு ஆணையின்படி ஏற்கனவே உள்ள மாதவாடகையில் 15% வாடகை உயர்வு செய்து மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து வழங்க அனுமதி பெற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 13.08.2012-ம் தேதிய தீர்மான எண்.73-ல் அலுவலக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.7403/12/அ9(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 186 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 73 நாள் 13.08.2012ன் தீர்மானத்தை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

பொருள்

கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72-ல் அவினாசி சாலையிலுள்ள வ.உ.சி.பூங்கா மைதானம் - வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை 1.மாமன்ற தீர்மான எண்.9, நாள்.17.08.2007
2. வ..வி.ம,நி.குழு.தீர்மானஎண்.56. நாள்.13.08.2012.

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.72-ல் வ.உ.சி.பூங்கா அவினாசி சாலை மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு நிகழ்ச்சிகளின் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண்.9 நாள்.17.08.2007-ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் அடிப்படையில் நாளது தேதிவரையில் மேற்படி மைதானத்திற்கு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு 5 வருடங்கள் ஆகின்ற காரணத்தினால் மேற்படி மைதானத்திற்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு உயர்வு செய்யலாம்.

| வ. எண் | நிகழ்ச்சி | தற்போயை வாடகை ரூ. | வாடகை உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|
| 01 | அரசியல் பொதுக்கூட்டம் | 7,500/– | 10,000/– |
| 02 | அரசு நடத்தும் விழாக்களுக்கு | 1,000/– | 1,000/– |
| 03 | தனியார் பொருட்காட்சி மற்றும் வியாபாரம் செய்ய | 12,500/– | 20,000/– |
| 04 | மத சம்பந்தமான நிகழ்ச்சிகள் நாள் ஒன்றுக்கு | 25,000/– | 35,000/– |
| 05 | சர்க்கஸ் நடத்துவதற்கு நாள் ஒன்றுக்கு | 3,000/– | 4,000/– |
| 06 | அரசியல் கட்சிகள் நடத்தும் மாநாடுகளுக்கு மைதானம் மற்றும் மேடை உட்பட | 15,000/– | 20,000/– |
| 07 | அரசு நடத்தும் பொருட்காட்சிக்கு | 2,000/– | 2,000/– |
| 08 | புத்தக கண்காட்சி நடத்தப்படுவதற்கு | 1,000/– | 1,250/– |
| 09 | மகளிர் சுயஉதவிக்குழு மூலம் நடத்தப்படும் மகளிர் தினவிழா நடத்துவதற்கு | 500/– | 650/– |
| 10 | இரண்டு சக்கர வாகன பந்தய நிகழ்ச்சிகள் | 5,000/– | 10,000/– |

| | | | |
|---|---|---|---|
| 11 | நான்கு சக்கர வாகன இலவச பரிசோதனை முகாம் | 5,000/– | 20,000/– |
| 12 | தன்னார்வ தொண்டு நிறுவன அமைப்பு மூலம் நடத்தப்படும் நிகழ்ச்சிகள். | 1,000/– | 1,300/– |
| 13 | மேற்குறிப்பிட்டுள்ள இனங்கள் தவிர வர்த்தக ரீதியாக சிறிய அளவில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் | 5,000/– | 10,000/– |
| 14 | வர்த்தக ரீதியாக இல்லாமல் பொது நல நோக்கில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் | 1,000/– | 1,300/– |
| 15 | இசை இரவு போன்ற நிகழ்ச்சிகள் | 25,000/– | 50,000/– |

வாகன நிறுத்தக்கட்டணம் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் நாள் ஒன்றுக்கு ரூ.1500/- ஆக வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது ரூ.3000/-ம் ஆக வசூல் செய்யலாம். இத்துடன் 12.36 சதவீத சேவைவரி சேர்த்து மேற்குறிப்பிட்டுள்ளவாறு வாடகை உயர்வு செய்வதற்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 13.08.2012-ம் தேதிய தீர்மான எண்.56-ல் வரிசை எண்.7-ல் உள்ள நிகழ்ச்சிக்கு தினவரி வாடகை ரூ.2,500/- எனவும் வரிசை எண்.9 - ல் உள்ள இனத்தின் தினசரி வாடகை ரூ.750/- என நிர்ணயம் செய்யவும், பிற இனங்களுக்கு பொருளிலுள்ள உயர்வு செய்யப்பட்ட வாடகை நிர்ணயம் செய்யவும் மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.9659/12/அ2(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 187 நாள் : 16.08.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 56 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு மற்றும் தெற்கு தாலூக்காவில் உயர்ரக மதுபான கடைகள் திறப்பதற்கு கடைகள் ஒதுக்கீடு செய்ததை - ரத்து செய்து மறு மின் ஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் -தொடர்பாக.

பார்வை : 1.மாமன்ற தீர்மான எண்.258. நாள்.27.02.2012.
2. வ..வி.ம,நி.குழு.தீர்மானஎண்.54. நாள்.13.08.2012.

***********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தளம் எண்.1-ல் மற்றும் திரு.வி.க. வணிக வளாக கடைகளில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் உயர்ரக மதுபான கடைகளை திறப்பதற்கு கடைகளை பொதுப் பணித்துறை வாடகை மதிப்பீட்டு அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| வ. எண் | வணிக வளாகத்தின் பெயர் | கடை எண் | மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை. ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.வி.க.மார்கெட் | 1 | 133 | 21.40 | 2,846/- |
| | திரு.வி.க.மார்கெட் | 2 | 133 | 21.40 | 2,846/- |
| 2 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் தளம் எண்.1 முதல் மாடியில் | 4 | 414 | 26.82 | 11,103/- |

மேற்படி மூன்று கடைகளை பெற்றுக் கொள்வதற்கான உரிம ஒப்பந்த பத்திரத்தை ரூ.50/- மதிப்புள்ள முத்திரை தாளில் எழுதிக் கொடுக்கும்படி வரைவு 26.03.2012-ல் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாவட்ட மேலாளர் டாஸ்மாக் கோவை அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.1027/2012/ஆர்வி.5 நாள்.21.05.2012-ல் எலைட் ஷாப் திறப்பது குறித்த திட்டம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாலும், டாஸ்மாக் கடை அமைப்பதற்கு போதுமான இடவசதி இல்லாத காரணத்தாலும் மாநகராட்சி ஒதுக்கீடு செய்த கடைகளில் டாஸ்மாக் மதுபானக் கடைகள் திறக்க இயலாது என்றும் தற்பொழுது இக்கடைகள் வேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.

மேற்படி கடையின் ஒதுக்கீட்டை ரத்து செய்து அக்கடைகளை தற்போதைய சந்தை மதிப்பில் பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும், அனுமதி பெற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 13.08.2012-ம் தேதிய தீர்மான எண்.54-ல் அலுவலக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.6984/11/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 188 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 54 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண்.81-ல் ஒப்பணக்கார வீதியிலுள்ள மாநகராட்சி வணிக வளாகம் கடைகள் - 3 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு 15% சதவீத வாடகையை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை எண் 147, ந.நி.ம.கு.வ.(நநி4) துறை, நாள். 30.12.2000.<br>2. அரசாணைஎண்.92ந.நி.ம.கு.வ.துறை, நாள்.03.07.2007<br>3. வ..வி.ம,நி.குழு.தீர்மானஎண்.57. நாள்.13.08.2012. |

****

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 81-ல் மத்திய மண்டலத்திற்குட்பட்ட ஒப்பணக்கார வீதிலுள்ள வணிக வளாக கடைகளின் மூன்றாண்டு உரிம காலம் முடிவடைகிறது. கடைகளின் மூன்றாண்டு உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07 –ன் படி கீழ் கண்ட கடைகளுக்கு 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யலாம்.

கடைஎண்.6-க்கு, மாமன்ற தீர்மான எண்.214, நாள்.21.01.2008-ன்படி, திரு.செய்யது இப்ராஹிம் என்பவருக்கு மாதவாடகை ரூ.1200/- வீதம் 31.03.2011 முடிய நிர்ணயம் செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1.4.2011 முதல் 31.03.2014 முடிய ,15 சதவீதம் வாடகை உயர்வு செய்து ரூ.1380/- யினை மாத வாடகையாக நிர்ணயம் செய்யலாம்.

மேற்படி வணிகவளாகத்தில் முதல் தளத்திலுள்ள கடைகளை திரு.குருவாயூரப்பன் என்பவருக்கு மாதவாடகையாக ரூ.2500/- வீதம் 14.09.2006 முதல் 31.03.2009 முடிய நிர்ணயம் செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1.4.2009 முதல் 31.03.2012 முடிய 15% வாடகை ரூ.2875/- உயர்வு செய்யப்பட்டுள்ளது. தற்போது 01.04.2012 முதல் 31.03.2015 முடிய 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து ரூ.3310/- யினை மாத வாடகையாக நிர்ணயம் செய்யலாம்.

மேற்படி கடை வாடகை உயர்வுடன் சேவை வரி 12.36 சதவீதத்தினையும் சேர்த்து செலுத்துவதற்கு ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும் அனுமதி வேண்டி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 13.08.2012-ம் தேதிய தீர்மான எண்.57-ல் அலுவலக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.5252/12/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 189 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 57 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 26

பொருள் : வணிகவளாக கடைகள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - வார்டு எண். 72, டாக்டர்.நஞ்சப்பா ரோடு வணிகவளாக கடைகள் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண் 147, ந.நி.ம.கு.வ.(நநி4) துறை, நாள். 30.12.2000
2. அரசாணை எண். 92 ந.நி.(ம) கு.வ.துறை.நாள்.03.07.2007
3. வ..வி.ம,நி.குழு.தீர்மானஎண்.55. நாள்.13.08.2012.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 72-ல் நஞ்சப்பாரோட்டிலுள்ள வணிக வளாகத்தில் 23 கடைகளும், அரசு நிறுவனங்கள் 7-ம் தற்போது உபயோகத்தில் உள்ளன

கடை எண். 18-க்கு 07.02.2012-ல் நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச தொகை ரூ.27,777/- யினை கோரிய திரு.அப்பாஸ் என்பவருக்கு மாமன்ற தீர்மான எண். 262 நாள் 27.02.2012-ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதுவரை வாடகை தொகை செலுத்தவில்லை. எனவே மேற்படி கடையின் உரிமத்தினை ரத்து செய்து மறுஏலம் கோரலாம். ஏல வைப்புத்தொகை, காப்புத் தொகை, சால்வென்சி தொகை ஆகியவற்றை பறிமுதல் செய்யலாம்.

9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள கடைகளுக்கு (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) அரசின் ஆணை எண்.92 ந.நி.ம.கு.வ. துறை, நாள்.03.07.2007-ன்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி உயர்வு செய்யலாம். உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36 சதவிகிதத்தினை செலுத்த ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் ஒப்புதல் அளித்திட அனுமதி வேண்டப்படுகிறது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 13.08.2012-ம் தேதிய தீர்மான எண்.55-ல் அலுவலகக் குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.6355/12/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 190 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 55 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 27

பார்வை : 1. வ..வி.ம,நி.குழு.தீர்மான எண்.71. நாள்.13.08.2012.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் குத்தகை இனம் மற்றும் மாதவாடகை கடைகளுக்கு கடந்த 20.06.2012-ல் மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இதில் கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.

(அ)

| வ. எண் | மாத வாடகை கடைகள் | அரசாங்க மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் கடைகள் :<br>* காய்கறி கடைகள் 10 எண்ணிக்கை (கடைஎண்கள் -28,29,30,31,32,46,47, 49, 50 மற்றும் 95)<br>* மாமிச கடைகள் 9 எண்ணிக்கை (கடை எண்கள். 8,9,10,11,12,13,14,15, மற்றும் 16) | 950/– |
| 2 | சக்திரோடு ஆடு அறுவைமனை அருகிலுள்ள ஆட்டிறைச்சி கடைகள் :<br>கடை எண். 1 , 2 மற்றும் 3. | 3,000/– |
| 3 | திரு.வி.க. மார்க்கெட் கடைகள் :<br>கடைஎண். 17 மற்றும் 18 | 2,100/– |
| 4 | ஒப்பணக்கார வீதியில் உள்ள மாநகராட்சி பள்ளி எதிரிலுள்ள மாநகராட்சி வணிக வளாக கடைகள்:<br>கடை எண். 8 | 11,550/- |

மேலும், கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 20.06.2012 அன்று நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்ட விபரங்கள்

(ஆ)

| வ. எண் | இனம் | 11.04.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட தொகை ரூ. | 25.04.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட தொகை ரூ. | 20.06.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | சத்தி ரோடு புல் மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (அரசு மதிப்பு ரூ.1,91,835/–) | 1,15,000/-<br>திரு.ராஜன் | 1,81,000/-<br>திரு.ராஜன் | 1,45,000/<br>திரு.எம்.எ.கலீல் ரஹ்மான் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | சீனிவாசாபுரம் கட்டணம் கழிப்பிடதிற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் (அரசு மதிப்பு ரூ.3,83,000/–) | 1,66,000/- திரு. அன்புராஜ் | 1,76,000/- திரு. அன்புராஜ் | 2,10,700/- திரு.எஸ்.வேலுச்சாமி |

வரிசை எண்.1

சத்திரோடு புல்மார்க்கெட்டிற்கு மூன்று முறை ஏலம் கோரப்பட்டது. இதில் பெறப்பட்ட ஏலக்கோரிக்கை அனைத்தும் அரசாங்க மதிப்பைவிட குறைவாகவே உள்ளது. மேற்படி இனத்திற்கு ஜீன் மாதம் வரை மாமன்ற தீர்மானஎண்.43 நாள்.30.05.2012-ன் ஒப்புதலுடன் நீட்டிப்பு வழங்கப்பட்டது. முந்தைய குத்தகைதாரர் மேற்படி இனத்தை நீட்டிப்பு பெற்று தொடர்ந்து நடத்த விருப்பம் இல்லாத காரணத்தினால் தற்போது இவ்வினத்தை 01.07.2012 முதல் ஒப்படை செய்யப்பட வேண்டியுள்ளதால் துறைமூலம் வசூல் செய்யப்படும் பட்சத்தில் மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு திரு.ராஜன் அவர்களின் 25.04.2012-ம் தேதிய ஏலக்கோரிக்கையான ரூ.1,81,000/-க்கு மேற்படி இனத்தினை ஒதுக்கீடு செய்யலாம்.

வரிசை எண்.2

சீனிவாசபுரம் நவீன கட்டணக் கழிப்பிடத்திற்கு 6 முறை ஏலம் நடைபெற்றது. 14.03.2012-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் யாரும் கலந்துகொள்ளவில்லை. மேலும், 21.03.2012-ல் ரூ.1,25,000/-ம், 29.03.2012-ல் 1,65,667/-ம், 11.04.2012-ல் ரூ.1,66,000/-ம், 25.04.2012-ல் 1,76,000/-ம் மற்றும் 10.05.2012-ல் 1,93,900/-ம் திரு.எம்.அன்புராஜ் என்பவரால் உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை பெறப்பட்டது. ஏழாவது முறையாக 20.06.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு.எஸ்.வேலுச்சாமி அவர்களிடமிருந்து ரூ.2,10,700/- ஏலக்கோரிக்கை பெறப்பட்டது. இது அரசாங்க மதிப்பைக்காட்டிலும் (45%)குறைவாகவே உள்ளது. இதனை மறுஏலம் கோரலாம்.

| வ. எண் | இனம் | 25.04.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட தொகை | 10.05.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட தொகை | 20.06.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 3 | ஆம்னி பேருந்து நிலையத்தில் ராதாகிருஷ்ண ரோடு வணிகவளாகம் அமைந்துள்ள இடத்தில் 117.10ச.மீட்டர் அளவுள்ள சிறுண்டிஅறை (அரசு மதிப்பு ரூ.83,500/–) | 46,100/- திரு.எம்.எ.கலீல்ரகுமான் | 57,000/- திரு.பி.எ.பதுருதீன் | 43,750/- திரு.ஆனிஸ் |
| 4 | திரு.வி.க.மார்க்கெட் கடைஎண்.10(அரசு மதிப்பு ரூ.2,100/–) | 1,250/- திருமதி. சித்ராமணி | 1,200/- திருமதி. சித்ராமணி | 1300/- திருமதி.சித்ராமணி |
| 5 | திரு.வி.க.மார்க்கெட் கடைஎண்.11 (அரசு மதிப்பு ரூ.2,100/–) | 1,250/- திருமதி. சித்ராமணி | 1,200/- திருமதி. சித்ராமணி | 1300/- திருமதி.சித்ராமணி |
| 6 | திரு.வி.க.மார்க்கெட் கடைஎண்.3,4 மற்றும் 5(அரசு மதிப்பு ரூ.2,100/ | - | - | 1200/- திரு.சண்முகசுந்தரம் (கடை ஒன்றிற்கு) |
| 7 | திரு.வி.க.மார்க்கெட் கடைஎண்.6(அரசு மதிப்பு ரூ.2,100/–) | - | - | 1200/- திரு.தங்கவேல் |
| 8 | திரு.வி.க.மார்க்கெட் கடைஎண். 23,24(அரசு மதிப்பு ரூ.2,100/–) | 1,250/- திருமதி. சித்ராமணி | 1,200/- திருமதி. சித்ராமணி | 1300/- திருமதி.சித்ராமணி (கடை ஒன்றிற்கு) |

வரிசை எண்.3-

ஆம்னி பேருந்து நிலையத்தில் ராதாகிருஷ்ண ரோடு வணிகவளாகம் அமைந்துள்ள இடத்தில் 117.10ச.மீட்டர் அளவுள்ள சிற்றுண்டி அறைக்கு 11.04.2012, 25.04.2012,10.05.2012 மற்றும் 20.06.2012 ஆகிய தேதிகளில் நான்கு முறை மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இதில் 20.06.2012-ல் நடைபெற்ற மறு மின் ஏலத்தில் கோரிய தொகை ரூ.43,750/-யினை விட 10.05.2012-ல் கோரிய தொகை ரூ.57,000/- அதிகமாக உள்ளது. எனவே, இதனை (திரு.பி.எ.பதுருதீன்) என்பவருக்கு ஒதுக்கீடு செய்ய பரிசீனை செய்யலாம்.

வரிசை எண்.4 மற்றும் 8 வரை

மேற்படி இனங்களுக்கு 11.04.2012, 25.04.2012,10.05.2012 மற்றும் 20.06.2012 ஆகிய தேதிகளில் நான்கு முறை மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அரசாங்க மதிப்பைக் காட்டிலும் குறைவாகவே உள்ளதால் மறு மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்

| வ. எண் | இனம் | 25.04.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட தொகை | 10.05.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட தொகை | தற்போது 20.06.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 9 | வார்டு எண் . 82-ல் என்.எச்.ரோடு, விக்டோரிய ஹால் மேற்கில் கடை எண். 1 (அரசு மதிப்பு ரூ.14,200/–) | - | - | 14,400/- திரு.வேலுச்சாமி |
| 10 | வார்டு எண் . 82-ல் என்.எச்.ரோடு, விக்டோரிய ஹால் மேற்கில் கடை எண். 2 (அரசு மதிப்பு ரூ.14,200/–) | - | - | 7,200/- திரு.வேலுச்சாமி |

வரிசைஎண்.9 மற்றும் 10

வார்டு எண் . 82-ல் என்.எச்.ரோடு, விக்டோரிய ஹால் மேற்கில் கடை எண். 1 -க்கு அரசுமதிப்பு ரூ.14,200/-ஐ காட்டிலும் கூடுதலாக ரூ.14,400/-க்கு திரு.வேலுச்சாமி அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. கடை எண். 2 -க்கு அரசுமதிப்பு ரூ.14,200/-ஐ காட்டிலும் குறைவாகவே ரூ.7,200/-க்கு திரு.வேலுச்சாமி அவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

மேற்படி இனத்திற்கு மின் ஏலம் நடைபெற்றது முதல் முறையாகும், எனவே மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரினால் கூடுதல் வருவாய் பெற வாய்ப்புள்ளதால் மறு ஏலம் கோரலாம்.

(அ) இனத்தை மறு ஏலம் கோரலாம்
(ஆ) வரிசை எண்.1-ஐ ஒதுக்கீடு செய்யலாம். வரிசை எண்.3-ஐ பரிசீலனை செய்யலாம். வரிசை எண்.2 மற்றும் 4 முதல் 10 வரை மறு ஏலம் கோரலாம்.

மேற்படி இனங்களை குறித்து முடிவு செய்ய வரி வதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டத்தில் 13.08.2012-த் தேதிய தீர்மான எண்.71-ல் வரிசை எண்.1சத்தி ரோடு புல் மார்க்கெட்டில் வணிக வளாகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளுக்கு ஆய்வு செய்து பொருள் வைக்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண்.2 மற்றும் 3-ல் உள்ள இனங்களுக்கு மறு ஏலம் கோர தீர்மானிக்கப்பட்டடது. வரிசை எண்,4,5,6,7 மற்றும் 8-ல் உள்ள இனங்களுக்கு உயர்நத பட்ச ஏலக் கோரிக்கையினை ஏற்று ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண்.9 மற்றும் 10 ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.9659/10/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 191 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 71 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 28

பார்வை : வ..வி.ம.நி.குழு.தீர்மான எண்.72. நாள்.13.08.2012.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 11.04.2012, 25.04.2012, 10.05.2012, 20.06.2012 ஆகிய தேதிகளில் ஏலம் நடைபெற்றது. 25.07.2012-ம் தேதியில் ஐந்தாவது முறையாக மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

வரிசை எண்.1

இதில் கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.

| வ. எண் | மாதவாடகை கடைகள் | அரசாங்க மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| அ | சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட் கடைகள் :<br>காய்கறி கடைகள் - 10 (கடைஎண்கள் -28,29,30,31,32,46,47, 49, 50 மற்றும் 95)<br>மாமிச கடைகள் - 9 (கடை எண்கள். 8,9,10,11,12,13,14,15, மற்றும் 16) | 950/– |
| ஆ | சக்திரோடு ஆடு அறுவைமனை அருகிலுள்ள ஆட்டிறைச்சி கடைகள் :<br>கடை எண். 1 , 2 மற்றும் 3. | 3,000/– |
| இ | திரு.வி.க. மார்க்கெட் கடைகள் :<br>கடைஎண். 3,4,5, 6,17 மற்றும் 18 | 2,100/– |

வரிசை எண்.2

கீழ் கண்ட குத்தகை இனங்களுக்கு 25.07.2012 அன்று பெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்ட விபரங்கள்,

| இனம் | 10.05.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட தொகை ரூ. | 20.06.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட தொகை ரூ. | 25.07.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| சீனிவாசாபுரம் கட்டணம் கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்<br>(அரசு மதிப்பு ரூ.3,83,000/–) | 1,93,000/-<br>திரு. அன்புராஜ் | 2,10,700/-<br>திரு.எஸ்.வேலுச்சாமி | 2,25,000/-<br>திரு.எஸ்.வேலுச்சாமி |

சீனிவாசபுரம் நவீன கட்டணக் கழிப்பிடத்திற்கு 7 முறை ஏலம் நடைபெற்றது.

| ஏலத்தேதி | ஏலம் கோரியவர் | உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|
| 14.03.12 | | - |
| 21.03.12 | திரு.எஸ்.ரமேஷ் | 1,25,000/- |
| 29.03.12 | திரு.அன்புராஜ் | 1,65,667/- |
| 11.04.12 | திரு.அன்புராஜ் | 1,66,000/- |
| 25.04.12 | திரு.அன்புராஜ் | 1,76,000/- |
| 10.05.12 | திரு.அன்புராஜ் | 1,93,900/- |
| 20.06.12 | திரு.எஸ்.வேலுச்சாமி | 2,10,700/- |

எட்டாவது முறையாக 25.07.12 அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு,எஸ்.வேலுச்சாமி அவர்களிடமிருந்து ரூ.2,25,000/-க்கு ஏலக்கோரிக்கை பெறப்பட்டது. இது அரசாங்க மதிப்பைக்காட்டிலும் 42 சதவீதம் குறைவாகவே உள்ளது. 01.04.2012 முதல் துறை மூலமாக வசூல் மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி இனத்திற்கு நாள் ஒன்றிற்கு சராசரியாக ரூ.120/- வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. (01.04.2012 முதல் 25.07.2012 வரை வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.13,850/-) மாதம் ஒன்றிக்கு சராசரியாக ரூ.3,600/-ம் மீதமுள்ள எட்டு மாதத்திற்கு ரூ.28,800/- மட்டுமே வருவாய் பெற வாய்ப்புள்ளது.

மேற்படி ஏலதாரர் ஒரு வருடத்திற்கு கோரிய தொகை ரூ.2,25,000/-யில் மாதம் ஒன்றிக்கு ரூ.18,750/-ம் (ரூ.2,25,000/12= ரூ.18,750 x 8 மாதம் = ரூ.1,50,000/- ஆகஸ்ட் 2012 முதல் மார்ச் 2013 முடிய) மீதமுள்ள எட்டு மாதத்திற்கு ரூ.1,50,000/-ம் கூடுதலாக பெற வாய்ப்புள்ளது. எனவே தொடர் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்படி இனத்தை உறுதி செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவு வேண்டப்பட்டது.

வரிசை எண்.3

| இனம் | 10.05.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட தொகை | 20.06.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட தொகை | 25.07.2012-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| திரு.வி.க.மார்க்கெட் கடைஎண்.10,11,23 மற்றும் 24 (அரசு மதிப்பு ரூ.2,100/–) | 1,200/- திருமதி.சித்ராமணி | 1,200/- திருமதி.சித்ராமணி | - |

மேற்படி இனத்திற்கு முதல் ஏலம் 11.04.2012-ம் தேதியிலும் அதன் பிறகு 25.04.12, 10.05.12, 20.06.12 மற்றும் 25.07.12 ஆகிய தேதிகளில் ஐந்து முறை மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அரசாங்க மதிப்பைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. 25.07.2012-ம் தேதிய ஏலத்தில் திருமதி சித்ராமணி என்பவர் மட்டுமே கலந்து கொண்டார். அவரிடமிருந்து மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. எனவே, இதனை மறு மின் ஏலம் கோரலாம்.

வரிசை எண்.4

| மாதவாடகை கடை | அரசாங்க மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|
| ஒப்பணக்கார வீதியில் உள்ள மாநகராட்சி பள்ளி எதிரிலுள்ள மாநகராட்சி வணிக வளாக கடை எண். 8 | 11,550/- |

மேற்படி இனத்திற்கு 25.07.2012-ம் தேதிய ஏலத்தில் திரு.T.S.அம்பிராஜ் மட்டுமே கலந்து கொண்டார். அவரிமிருந்து மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. எனவே இவ்வினத்திற்கு மறு ஏலம் கோரலாம்.

(அ)
வரிசை எண்.1,3 மற்றும் 4 –ல் உள்ள இனத்திற்கு மறு மின் ஏலம் கோரலாம்.

(ஆ)
வரிசை எண்.2–ஐ ஒதுக்கீடு செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது.

மேற்படி இனங்களை குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

அலுவலக குறிப்பு -

அ. - அனுமதிக்கலாம்
ஆ. - எட்டாவது முறை ஏலம் என்பதாலும் கூடுதல் தொகை வர வாய்ப்பில்லை என்பதாலும் தொடர் இழப்பைத் தடுக்க உறுதி செய்யலாம்.

வரி வதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 13.08.2012-ம் தேதிய தீர்மான எண்.72-ல் வரிசை எண்.2-ல் உள்ள இனத்திற்கு உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கையினை ஏற்று ஒப்படைச்செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண்.1 மற்றும் 4-ல் உள்ள இனத்திற்கு மறு ஏலம் கோர தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண்.3 இனத்திற்கு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையினை ஏற்று ஒப்படை செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.9659/10/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 192 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 72 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 29

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு - பழைய மண் அள்ளும் இயந்திரங்களை கழிவு செய்து அதற்கு மாற்றாக புதிய டிராக்டர்கள் வாங்குவது – தொடர்பாக.

வணக்கத்திற்குரிய மேயா் அவா்கள் கடந்த 10-08-2012 அன்று சிறப்பு தூய்மை பணி தொடா்பாக நடத்திய ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான மாமன்ற உறுப்பினா்கள் மேற்படி வாா்டுகளில் சிறப்பு தூய்மை பணிகள் மேற்கொள்ளும் பொழுது சாலையோரங்களில் முளைக்கும் புல் மற்றும் செடிகளை பணியாட்களை வைத்து திறன்பட சுத்தம் செய்ய இயலாத நிலையுள்ளதால் அப்பணிகளை செய்வதற்கு டிராக்டா் டோசா் இயந்திரங்களை பணியில் ஈடுபடுத்த வேண்டுகோள் விடுத்தனா். மேற்படி பொருளினை விவாதித்தப்பின்னா் வணக்கத்திற்குரிய மேயா் அவா்கள் மண்டலம் ஒன்றிற்கு ஒரு டிராக்டா் டோசா் இயந்திரம் வீதம் மொத்தம் 5 எண்ணிக்கையிலான புதிய டிராக்டா் டோசா் இயந்திரங்களை வாங்கி பயன்படுத்தலாமென அறிவுரை வழங்கினாா்.

இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக ஏற்கனவே பயன்பாட்டிலிருந்து வந்த கீழ் கண்ட மண் அள்ளும் இயந்திரங்களில் பெரும் பழுதுகள் ஏற்பட்ட காரணமாக நிறுத்தப்பட்டுள்ளன. அதன் விபரம் பின் வருமாறு:

| வ. எண் | இயந்திர பதிவு எண் | இயந்திரம் வாங்கப்பட்ட வருடம் | இயந்திரத்தின் மாடல் |
|---|---|---|---|
| 1. | TN37-Q1433 | 1997 | Escorts, ECEL, Front End Loader |
| 2. | TN37-Q1434 | 1997 | Escorts, ECEL, Front End Loader |
| 3. | TN37-Q1435 | 1997 | Escorts, ECEL, Front End Loader |
| 4. | EXCAVATOR-A | 1987 | JCB, Excavator Loader |
| 5. | EXCAVATOR-B | 1987 | JCB, Excavator Loader |
| 6. | FRONT END LOADER | 1987 | JCB, Front End Loader |

மேலே குறிக்கப்பட்டுள்ள இயந்திரங்கள் யாவும் 15 ஆண்டுகளுக்கு முன்னா் வாங்கப்பட்டு தற்சமயம் அவற்றில் ஏற்பட்டுள்ள பெரும் பழுதுகளை நீக்க ஆகும் செலவினம் புதிய இயந்திரங்களை வாங்குவதற்காகும் செலவினத்திற்கு சமமாகும் என்பதனால் அவற்றினை கழிவு செய்து அதற்கு மாற்றாக 4 எண்ணிக்கையிலான டிராக்டா் டோசா் இயந்திரங்களை வாங்கிக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி பெற பொருள் வைக்கப்படுகிறது. மேற்படி 4 எண்ணிக்கைகளிலான 2 பெரிய மற்றும் 2 சிறிய புதிய டிராக்டா் டோசா் இயந்திரங்களை வாங்குவதற்கு 2012-13 ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்டகத்தில் ***3107-இலகு ரக வாகனங்கள்*** என்ற தலைப்பில் ரூ.60.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வாங்கிக் கொள்ளலாம்.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.9307/2012/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 193 நாள் : 16.08.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 30

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி – பொறியியல் பிரிவு - வாகனங்கள் – அலுவலா்கள் பயன்பாட்டிலுள்ள பழைய வாகனங்களை கழிவு செய்து அதற்கு மாற்றாக புதியவைகள் வாங்குவது – தொடா்பாக.

பாா்வை :
1) அரசாணை (நிலை) எண். 2275 உள்துறை (போக்குவரத்து -E) நாள் 10-10-1990.
2) அரசாணை (நிலை) எண். 983 உள்துறை (போக்குவரத்து -IV) நாள் 03-08-2004.

கோயம்புத்தூா் மாநகராட்சியின் அலுவலா்களின் அலுவல் பணிகளுக்காக பயன்பாட்டிலுள்ள கீழ் கண்ட இலகுரக மோட்டாா் வாகனங்களில் பெரும் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் வாகனங்கள் அடிக்கடி நின்று போய்விடுகிறது. இதனால் அலுவலக பணிகள் மிகவும் பாதிப்படைகிறது. அதன் விபரம் பின் வருமாறு:

| வ. எண் | வாகன பதிவு எண் | வாகனம் வாங்கப்பட்ட நாள் | வாகனத்தின் மாடல் | வாகனம் ஓடியுள்ள தூரம் (கி.மீ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | TAG 6512 | 22-08-1988 | மஹேந்திரா ஜீப் (டீசல்) | 7.49 |
| 2. | TAR 9531 | 11-05-1989 | மஹேந்திரா ஜீப் (டீசல்) | 7.17 |
| 3. | TAR 9473 | 11-05-1989 | மஹேந்திரா ஜீப் (டீசல்) | 7.17 |
| 4. | TN37-J0234 | 16-03-1995 | மஹேந்திரா கமான்டர் ஜீப் (டீசல்) | 5.30 |
| 5. | TN37-M3646 | 03-09-1996 | மஹேந்திரா கமான்டர் ஜீப் | 4.99 |
| 6. | TN38-B7567 | 12-08-1996 | மாருதி ஆம்னி வேன் (பெட்ரோல்) | 3.49 |

பார்வையில் 1ல் கண்ட அரசாணையின் படி 10 ஆண்டு வயதிற்கு மேற்பட்ட வாகனங்களில் ஏற்படும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவினத்தொகை ஆண்டொன்றிற்கு டீசல் மற்றும் பெட்ரோல் வாகனங்களுக்கு முறையே ரூ.12,000/- மற்றும் ரூ.9,000/- என உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்கூறிய வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவினத்தொகை வாகனம் ஒன்றிற்கு உத்தேசமாக ரூ.35,000/- ஆகும். இது அரசு நிர்ணயித்த உச்ச வரம்பினை காட்டிலும் மிகவும் கூடுதல் செலவினமாக அமையும்.

பார்வையில் 2ல் கண்ட அரசாணையின் படி டீசல் இயக்கூர்திகளின் வயது 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருந்தாலோ அல்லது 2.5 லட்சம் கி.மீ. தூரம் ஓடியிருந்காலோ மற்றும் பெட்ரோல் இயக்கூர்திகளின் வயது 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருந்தாலோ அல்லது 2.0 லட்சம் கி.மீ. தூரம் ஓடியிருந்காலோ இதில் எது பின் தேதியில் அமைகிறதோ அந்த தேதியில் மேற்படி வாகனத்தினை கழிவு செய்யலகமென ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வாகனங்களை கழிவு செய்வதற்கு தானியங்கிப்பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, கோவை (மோட்டார் வாகனப்பராமரிப்பு துறை), மோட்டார் வாகன ஆய்வாளர் (தரம்-I) மற்றும் கம்மியர் (தரம்-I), அரசு தானியங்கி பணிமனை, கோவை (மோட்டார் வாகனப்பராமரிப்பு துறை) ஆகியோரை கொண்ட வல்லுநர் குழுவின் பரிந்துரையுடன் இயக்குநர், மோட்டார் வாகனப்பராமரிப்பு துறை, சென்னை அவர்களின் ஆணையினை பெற்று அவரால் நிர்ணயம் செய்யப்படும் விலைக்கு குறையாமல் விற்பனை செய்யப்பட வேண்டும்.

மேலே குறிக்கப்பட்டுள்ள வாகனங்கள் யாவும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் அனைத்தினையும் பூர்த்தி செய்வதால் அவற்றினை இயக்குநர், மோட்டார் வாகனப்பராமரிப்பு துறை, சென்னை அவர்களின் ஆணையினை பெற்று கழிவு செய்து அவற்றிற்கு பதில் 6 எண்ணிக்கைகளிலான புதிய மஹேந்திரா பொலீரோ ஜீப் (டீசல்) களை ரூ.45.00 லட்சம் செலவினத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று வாங்கிக்கொள்ள மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. மேற்படி 6 எண்ணிக்கைகளிலான புதிய இயக்கூர்திகளை வாங்குவதற்கு 2012-13 ஆண்டிற்கான வரவு செலவு திட்டகத்தில் ***3107-இலகு ரக வாகனங்கள்*** என்ற தலைப்பில் ரூ.50.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.957/2005/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 194 நாள் : 16.08.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 31

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்புப்பிரிவு - புவியியல் தகவல் அமைப்பு (Geographical Information System - GIS) - சொத்து கணக்கெடுப்பு - ஒவ்வொரு சொத்திற்கும் தனியாக குறியீட்டு எண் ஒதுக்கீடு செய்தல் - எதிர்கால தேவைகளுக்கு பயன்படுத்துதல் - தனியார் அமைப்புகளை பயன்படுத்துதல் - கணக்கெடுப்பு பணிக்கு தொகை வழங்குதல் - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு ஒப்புதல் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக.

பார்வை
1. நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் 16.06.2012ம் தேதிய GIS குறித்தான ஆய்வுக் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட அறிவுரை
2. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 80 நாள் 13.08.2012

முந்தைய கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளிலும் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தாரால் மாநகர எல்லைக்குள் உள்ள அனைத்து சொத்துக்களுக்கும் தனியாக குறியீட்டு எண் ஒதுக்கீடு செய்து அனைத்து சொத்துக்கள் குறித்தான கட்டிட அளவு, உரிமையாளர் பெயர் முதலான விபரங்களை கணினியில் பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரால் உரிய உத்திரவுகள் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இந்நிறுவனத்தினருடன் களப்பணி செய்து முந்தைய மாநகராட்சி பகுதியில் உள்ள 60 வார்டுகளிலும் உள்ள அனைத்து சொத்துக்கள் குறித்தான விபரங்களை சேகரிக்க TCS நிறுவன பணியாளருடன் மாநகராட்சி அலுவலர் களப்பணிக்குச் செல்ல வேண்டும். தற்போது 60 வார்டுகளிலும் சுமார் 236000 சொத்து விதிப்புகள் உள்ளன. இவற்றோடு வரி விதிப்பு செய்யப்படாத கட்டிடங்கள் குறித்த விபரங்களும் சேகரிக்கப்பட வேண்டும். இப்பணியானது மூன்று மாத காலத்திற்குள் செய்து முடிக்க நகராட்சி நிர்வாக ஆணையரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மாநகராட்சி வரிவசூலர்/ குடிநீர்மானி கணக்கெடுப்பாளர் ஆகியோருடன் மாநகராட்சி அலுவலர் அல்லாத தனிநபர்கள்/ மாணவர்கள்/ உரிமம் பெற்ற கட்டிட பட வரைவாளர்கள் முதலான தனி நபர்களின் உதவியுடன் இப்பணிகளை மேற்கொள்ளவும் கீழக்கண்டவாறு ஒவ்வொரு சொத்து வரி விதிப்பிற்கும் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளும் மாநகராட்சி அலுவலர்கள் / தனிநபர்கள் ஆகியோருக்கு கட்டணம் செலுத்தவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்பட்டது.

- சொத்து வரி விதிப்பு ஒன்றிற்கு நேரடியாக / அளவீடு செய்து படிவம் பூர்த்தி செய்து வழங்க - ரூ.5.00
- 
- சொத்து வரி விதிப்பு செய்யப்படாத கட்டிடங்களை நேரடியாக / அளவீடு செய்து படிவம் பூர்த்தி செய்து வழங்க - - ரூ.10.00

முந்தைய கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் உள்ள 60 வார்டுகளிலும் இப்பணியினை மேற்கொள்ள தோராயமாக ரூ. 20/- இலட்சம் செலவினம் ஆகும். இக்கணக்கெடுப்பு பணிக்கும் செலவினத் தொகை தோராயமாக ரூ.20/- இலட்சத்திற்கும் அனுமதி வேண்டி வரிவிதிப்புக் குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டதில் தீர்மானம் எண் 80 நாள் 13.08.2012ன்படி, மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.11447/2008/MH5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 195 நாள் : 16.08.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 80 நாள் 13.08.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 32

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – சிறுவாணி – பில்லூர் II குடிநீர் திட்டங்களை இணைத்தல் - இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பில்லூர் II-ம் குடிநீர் திட்டத்திலிருந்து பாரதி பூங்காவிலுள்ள சிறுவாணி நீர்த்தேக்க தொட்டி இரும்பு நீர்க்கொணரும் குழாய்கள்(MS Pipes) இணைத்து குடிநீர் விநியோகம் செய்தல்- உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1500 லட்சம் - அரசிடமிருந்து நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலிருந்து நிதி உதவி, தொழிற்நுட்ப அனுமதி பெற்று திட்டம் செயல்படுத்த மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை : கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.4 நாள்.30.07.2012

********

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டதின்கீழ் பில்லூர்-II குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. தற்பொழுது மேற்படி திட்டத்தின் மூலம் மாநகராட்சிக்கு தினசரி 30 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தினசரி 60 மில்லியன் லிட்டர், (அதாவது 125-65 மில்லியன் லிட்டர்) மாநகராட்சி பகுதிகளுக்கு விரைவில் விநியோகம் செய்யப்படும்.

சிறுவாணி அணையின் குறைந்த பட்ச நீர்மட்டம் 863.40 மீ ஆகும். தற்சமயம் சிறுவாணி அணையின் நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தாமதித்ததின் காரணமாக, நீர்மட்டம் 868.55 கடல் மட்டத்திலிருந்து உயரத்தில் உள்ளது. இது சென்ற ஆண்டைவிட 7.71 மீட்டர் நீர்மட்டம் குறைவாக உள்ளது. தற்சமயம் 3930 மில்லியன் லிட்டர் குடிநீர் அணையில் இருப்பில் உள்ளது, இதிலிருந்து தினசரி 80 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான குறிச்சி, குனியமுத்தூர், வீரகேரளம் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பருவமழை பொய்த்ததால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலையினை தவிர்க்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, சிறுவாணி விநியோகப் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாட்டை தவிர்க்கவும், வருங்காலங்களில் இம்மாதிரியான நிகழ்வுகள் ஏற்படும் பொழுது சிறுவாணி குடிநீர் விநியோகப் பகுதிகளில் பில்லூர் குடிநீரை விநியோகிக்கவும், பில்லூர் (திட்டம்-II)—ல் இயங்கும் இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பிரதான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பாரதி பூங்காவிலுள்ள சிறுவாணி தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு 800மி.மீ மற்றும் 900மி.மீ விட்டமுள்ள பிரதான இரும்பு நீர்க்கொணரும் குழாய்கள் மூலம் (MS Pipes) மணியகாரன்பாளையம், சங்கனூர் நல்லாம்பாளையம், கவுண்டம்பாளையம் போன்ற பகுதிகள் வழியாக சுமார் 13 கி.மீ நீளத்திற்கு இணைத்து குடிநீர் விநியோகம் செய்ய மதிப்பீட்டுத் தொகை ரூ.1500.00 இலட்சங்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குழாய் பதிப்பதின் மூலம் பில்லூர் இரண்டாம் திட்டம் முழுமையாக அமல்படுத்தப்படும்பொழுது அதிலிருந்து சுமார் 10 மில்லியன் லிட்டர் குடிநீர் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளான சின்னவேடம்பட்டி, வெள்ளக்கிணறு, கவுண்டம்பாளையம் பகுதிகளுக்கு உடனடியாக குடிநீர் விநியோகம் செய்யலாம். இதனால் ஆண்டு ஒன்றுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணமாக செலுத்த வேண்டிய தொகையில் தோராயமாக ரூ164 இலட்சங்கள் மாநகராட்சிக்கு சேமிப்பு ஏற்படும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் பாரதி பூங்காவில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் குடிநீர் பெறப்பட்டு நீருந்து மூலம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் நீரேற்றி விநியோகம் செய்ய இம்மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,500 இலட்சங்களுக்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி மற்றும் அரசு மானியம்/கடனுதவி பெற்று திட்டத்தை நிறைவேற்றவும் அதற்கான தொழிற்நுட்ப அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : திட்டத்திற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,500 இலட்சத்திற்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறவும் மற்றும் அரசு மானியம்/கடனுதவி பெற்று திட்டத்தை நிறைவேற்றவும், தொழிற்நுட்ப அனுமதி பெறவும், நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் அரசுக்கு பிரேரணை அனுப்பவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4603/2012/ப.வ.(எம்)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 196 நாள் : 16.08.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது மேலும் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 1500 இலட்சம் முழுமையும் அரசு மானியமாக வழங்கி திட்டத்தை செயல்படுத்த உதவிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ளும் பிரேரணையை அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி